Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –14

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி–16 | 01–09–2004 | புதன்கிழமை | ஓசை –196

கணேசா நகை மாளிகை



தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123, பஜார் வீதி, வவுனியா. T.P.-024-2222464

இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(சி-10122)

## போர்நிறுத்தம் சந்திக்கும் நெருக்கடிகள் குறித்து பாலசிங்கம் -எரிக்சூல்ஹெய்ம் லண்டனில் பேச்சு




விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியரு மான அன்ரன் பாலசிங்கம்

அவர்களும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்மும் லண்டனில் நேற்றுச் சந்தித் துப் பேசியுள்ளார். போர்நிறுத்த உடன்படிக்கை குறித்தும் கொழும் பிலும் கிழக்கிலும் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பாகவும் இதன்போது விரிவாகப் பேசப்பட்டது. இச் சந்திப்பு இரண்டு மணி நேரம் நடைபெற்றது. இதில் இலங்கைக் கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்காரும் இடம் பெற்றிருந்தார். போர்நிறுத்த உடன்படிக்கையின் அனைத்து அம்சங்கள் குறித்தும் பேசப்பட்ட தாகவும் இரு தரப்பினரும் போர் நிறுத்த உடன்படிக்கையை கடைப் பிடித்து நடப்பது அவசியம் என வும் எரிக்சூல்ஹெய்ம் தெரிவித் தார்.

கொழும்பில் அண்மையில் நடந்த கொலைகள், கிழக்கில் இடம்பெறும் வன்முறைகள் பற்றி யும் பேசப்பட்டதாகவும் எரிக் சூல்ஹெய்ம் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை இந்தப் பேச்சுக் களின்போது ஆராயப்பட்ட விட



யங்கள் பற்றி ஹான்ஸ் பிரஸ்கார் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் விளக்குவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் ராணுவத்தினருடன் மீண்டும் புலிகள் வெள்ளியன்று பேச்சுக்கள் நடத்துவர்!

## கண்காணிப்புக் குழுவுடன் சந்திப்பில் இணக்கம் ஏற்பட்டதாக கௌசல்யன்


**இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் வேண்டுகோளுக்கு இணங்க எதிர்வரும் வெள்ளிக்கிழமை சிறிலங்கா படையினருடன் மீண்டும் பேசவுள்ளோம் என மட்டு–அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் கூறியுள்ளார். தமிழீழவிடுதலைப்புலிகளின் மட்டு–அம்பாறை மாவட்டச் சிறப்புத்தளபதி கேணல் ரமேஸ், அரசியல்துறைப்பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோர் இலங்கைப்போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத்தலைவர் டொன்புறூவ் ஹொவ்டேயைச் சந்தித்த பின்பே அவர் இவ்வாறுகூறினார்.**

நேற்று கொக்கட்டிச்சோலை சாலையகத்தில் நடைபெற்ற சந்திப்பையடுத்து லண்டன் பி.பி.சியின் தமிழோசைக்கு வழங் கிய செவ்வியின் போது கௌசல்யன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகை யில் மட்டக்களப்பு மாவட்டத்தின் அண்மைக்கால நிகழ்வுகள் தொடர் பாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருடன் உரையாடினோம்.

குறிப்பாக எங்களுடைய போராளிகள் இராணுவக் கட்டுப் பாட்டுப் பிரதேசங்களுக்குச் சென்று வேலைசெய்வதில் பல அச்சுறுத்தல்களுக்கும், சிரமங்க ளுக்கும் உள்ளாகின்றனர் என் பதை போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழுத் தலைவருக்கு விளக்கிக்

(14 ஆம் பக்கம் பார்க்க)



## புலிகள்–கண்காணிப்புக்குழு நேற்று மட்டக்களப்பில் சந்திப்பு

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கும், விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு- அம்பாறை பிராந்தியத் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று நடைபெற்றுள்ளது.

காலை 11.00 மணியளவில் கொக்கட்டிச்சோலையில் நடைபெற்ற இச்சந்திப்பில் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் டொன்புறூவ் ஹொவ்டே மற்றும் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் உட்பட கண்காணிப்புக்குழுத் தலைமையகக் குழுவினரும், விடுதலைப் புலிகளின் மட்டு.அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ், அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், தளபதி ரமணன் ஆகியோரும் பங்குபற்றினர்.

நீண்டகால இடைவெளிக்குப் பின் நடாத்தப்பட்ட இச்சந்திப்பில் இரு தரப்பினரும் தற்கால அரசியல் நிலவரம் குறித்து விரிவாக ஆராய்ந்தனர். சிறப்புத்தளபதி கேணல் ரமேஷ் அவர்கள் "தமது அரசியல் செயற்பாடுகளின் மூலம் பொதுமக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்பி அவர்களுடன் தொடர்பு

(14ஆம் பக்கம் பார்க்க)

## சொந்த இடத்தில் மீளக்குடியமர அனுமதிக்கக் கோரி மகஜர் சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மாராட்சியின் உயர்பாதுகாப்பு வலயப்பகுதியில் மீளக்குடியமர அனுமதிக்கக்கோரும் மகஜர்களை அப்பகுதி பொது அமைப்புகள் நேற்று நேரடியாக யாழ். அரச அதிபர் மற்றும் இலங்கை மனித உரிமை கள் ஆணைக்குழு மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழு என்பவற்றிடம் கையளித்துள்ளன.

தென்மாராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத் தின் தலைவர் க.அருந்தவபாலன் மற்றும் தென் மராட்சி தேசிய எழுச்சிப்பேரவையின் க.சந்திரசேகரம் ஆகியோர் தலைமையிலான இடம்பெயர்ந்த மக்களது பிரதிநிதிகள் குழுவே இம்மகஜர்களை கையளித்துள்ளது.

தமது கோரிக்கைகளுக்கான உரிய பதில் விரைவில் வழங்கப்படாவிடின் தென்மராட்சிப் பகுதி



யிலுள்ள அரச திணைக்களங்களை முடக்குவதுடன் கண்டி வீதியூடாக போக்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர் மீது துப்பாக்கிச் சூடு குருநகரில் பதற்றம்

யாழ்.குடாக்கடற்பகுதியினில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றதாகக் கூறப்படும் அசம்பாவிதம் ஒன்றையடுத்து குருநகர்ப் பகுதியில் நேற்று பரவலாக பதற்றமான சூழல் ஒன்று நிலவியது. குருநகர் மீனவர் சங்கம் முன்பாகவும் முக்கிய சந்திப்பகுதிகளிலும் பெருமளவிலான மீனவர்கள் குவிந்திருந்தனர்.

முன்னதாகக் குடாக்கடலில் இடம்பெற்றதாகக் கூறப்படும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்றில் குருநகர் தண்ணீர்த் தாங்கியடிப் பகுதியைச் சேர்ந்த தர்மநாயகம் அமலன்

(14ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால அதிகார சபை யோசனை நாடு பிரிந்து செல்ல வழிவகுக்கும்

### - தேசப்பற்றாளர் அமைப்புக் கூறுகின்றது.

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக் காலத்தன்னாட்சி அதிகார சபை யோசனையை ஏற்றுக்கொள் வதன் மூலம நாடு பிரிந்து செல்ல வழிவகுக்கப்படும் எனத் தேசப்பற் றாளர் அமைப்பு தெரிவித்துள்ளது. நேற்றுமுன்தினம் புத்தளத்தில் நடைபெற்ற அமைப்பின் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய தேசப்பற்றா ளர் அமைப்பின் தலைவர் எல்லே குணவன்சதேரர், குறிப்பிட்ட இடைக் கால தன்னாட்சி அதிகார சபை யின், நாட்டில் தனியான காவல் துறை தனியான நீதிமன்ற அமைப்பு, மற்றும் தனியரசு என்பன உத்தி யோகபூர்வமாக செயற்பட வழியேற் பட்டு விடும் எனத் தெரிவித்தார் எனவே சிங்கள மக்கள் இந்த தன்னாட்சி அதிகாரத்துக்கு எதிராக நடவடிக் க்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.(32)

- தென்மராட்சியில் படையினரின் செயற்பாடுகள் -

# புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறுவதுடன் அடிப்படை உரிமையையும் மறுக்கின்றது

- தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் மகஜர்

உயர்பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே படையினர் பல வீடுகளை கையகப்படுத்தி வைத்திருப்பதும், உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்களைத் தமது வாழ் விடங்களில் வாழ விடாது தடுப்பதும் சுதந்திரமாக கடற்றொழிலை மேற்கொள்ள விடாது தடுப்பதும் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயல் என்பதற்கு மேலாக அடிப்படை உரிமையைக் குழி தோண்டிப் புதைக்கும் செயலாகும் எனத் தென்மராட்சிப் பொது அமைப்புக்கள் நேற்றுக் கையளித்த மகஜரில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

அந்த மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

தென்மராட்சிப்பிரதேசத்திலுள்ள பெருநிலப்பரப்பு அதிஉயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்களின் பாவனைக்குத் தடுக்கப்பட்டிருப்பதுடன்உயர்பாதுகாப்பு வலயத்தினுள் அடங்காத பகுதிகளையும், வீடுகளையும் கூட இராணுவத்தினர் கையகப் படுத்தி வைத்துள்ளனர். இதனால் இக்குடியிருப்பு மக்கள் வீடு வாசல்கள் அற்று அகதிவாழ்வு வாழ்ந்து அல்லற்படுகின்றனர்.

குறிப்பாக உசன் பகுதியில் பல வீடுகளை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர். புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி தனிப்பட்ட வீடுகள் யாவும் அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட வேண்டியது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. உடன்படிக்கை கைச்சாத்தாகி இரண்டரை வருடங்களாகியும் வீட்டுரிமையாளரிடம் அவை கையளிக்கப்பட வில்லை.

இதேபோல தென்மராட்சிப் பிரதேசத்தில் தனங்கிளப்பு மறவன் புலவு எழுதுமட்டுவாள், கரம்பகம் ஒட்டுவெளி போன்ற பல பகுதிகளில் வாழ்ந்து தற்போது அகதிகளாக அலைந்து கொண்டிருக்கும் மக்களை தமது வாழ்விடங்களில் வாழவிடுமாறு எத்தனையோ தடவைகள் பல் வேறு வழிகளில் வேண்டுகோள் விடுத்தும் எப்பயனும் கிடைக்க வில்லை. சுதந்திரமாகக் கடற்றொழிலை மேற்கொள்ள அனுமதிக்குமாறு கோவிலாக்கண்டி மக்களால் விடுக்கப்பட்ட வேண்டு கோளுக்கும் சாதகமான பதில் இது வரை இல்லை.

இவையாவும் யுத்தநிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயல்கள் என்பவற்றுக்கு மேலாக ஒரு சனநாயக நாட்டில் ஒவ்வொரு குடிமகனதும் அடிப்படை உரிமையைக் குழிதோண்டிப் புதைக்கும் செயல் என்பதையும் தாங்கள் ஏற்றுக்கொள்வீர்கள்.

எனவே இம்மக்களின் பின் வரும் நியாயமான கோரிக்கைகளை நிறை வேற்றுவதற்கு ஆவண செய்யுமாறு தங்களை தென்மராட்சிப் பொது அமைப்புக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

உசன்போன்ற பகுதிகளில் இராணுவம் கையகப்படுத்தி வைத்துள்ள வீடுகளை அவற்றின் உரிமையாளரிடம் உடனடியாக கையளித்தல்.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற கட்டுப்பாடுகளை அகற்றி தனங்கிளப்பு, மறவன்புலவு, எழுதுமட்டுவாள், கரம்பகம், ஒட்டுவெளி போன்ற கிராம மக்களைக் குடியேற அனுமதித்தல்.

கோவிலாக்கண்டி மீனவர்களை சுதந்திரமாகக் கடற்றொழில் செய்ய அனுமதித்தல்.

இக்கோரிக்கைகளுக்கு உரிய தீர்வை விரைவில் பெற்றுத்தருவீர்களென எதிர்பார்க்கிறோம். உரிய தீர்வு கிடைக்காதவிடத்து இப் பிரதேச மக்களும், பொது அமைப்புக்களும் இணைந்து தென்மராட்சிப் பிரதேசத்தின் சகல அரச நிர்வாகச் செயற்பாடுகளையும், பிரதான போக்குவரத்தையும் ஸ்தம்பிக்கச் செய்வதற்கான தொடர் வெகுசனப் போராட்டத்தில் ஈடுபட ஆயத்தமாகிறார்கள் என்பதையும் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (27)

# கரைச்சிப் பிரதேச சபையின் செயலாளராகப் பதவியேற்பு



(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபையின் செயலாளராக வென்சஸ்யோஸ் குலேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இன்று கரைச்சிப் பிரதேசசபைச் செயலகத்தில் தமது செயலாளர் பதவியினைப் பொறுப்பேற்கவுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

கிளி.வலய மற்றும் துணுக்காய் வலயக்கல்விப்பணிமனைக் கணக்காளராகப் பணிபுரிந்த இவர் தற்போது பதவி உயர்வு பெற்று மேற்படி பதவியினை இன்று பொறுப்பேற்கின்றமை என்பது குறிப்பிடத்தக்கது. (சோ.கு)

# கிளி.யில் நீர்த்தாங்கிகள் மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் வரட்சி காரணமாக குடிநீர்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெறவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதற்கென சமூக சேவைகள் திணைக்கழத்தினால் நீர்த்தாங்கிகள் அனுப்பி வைக்கப்பெற்று அவைகள் பிரதேச செயலர் பணிமனைகளுக்கு வழங்கப் பெற்றுள்ளதுடன் மேற்படி நீர்த்தாங்கிகள் குடிநீருக்கு தட்டுப்பாடு நிலவி வரும் கிராமங்களுக்கு அனுப்பி வைக்கப்பெற்று, கொள்கலன்கள் மூலம் குடிநீர் நீர்த்தாங்கிகளில் நிரப்பி குடிநீரினை மக்களுக்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெறவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

மேற்படி விடயம் சம்பந்தமாக பிரதேச செயலர்கள் மட்டத்தில் நேற்று முன்தினம் அரச அதிபர் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று அரச செயலக மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

இன்னும் சில தினங்களில் குடிநீர் வழங்குவதற்கான முன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளதென செயலக வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ.கு)

# சிறுவர் உரிமைகள் தொடர்பாக கிளி.மாவட்டத்தில் பயிற்சி

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினால் யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் சிறுவர் உரிமை தொடர்பான பயிற்சி ஒன்று நடத்தப்பட்டுள்ளது. கிளிநொச்சிப் பிரதேச இணைப்பாளரின் ஒழுங்குபடுத்தலில் எதிர்காலச் சிறார்களின் நலனைக்கருத்திற் கொண்டு செயற்படுத்தப்பட்ட ரான திருமதி.மதுரநாயகம் மோகனபாலன் த.பு.கழக சிறுவர் நலன் திட்ட உத்தியோகத்தர் திரு.மதனமோகன் ஜெயக்குமார், மோகன்ராஜ் ஆகியோர் சிறுவர்களின் நலன், அவர்களின் உரிமைகள், சிறார்கள் தொடர்பாக பெற்றோர், ஆசிரியர் சமூகத்தின் பங்களிப்பு சிறுவர் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்,



இப்பயிற்சிகள் கடந்த 7ஆம், 8ஆம், திகதிகளில் பூநகரி வலய ஆசிரியர்கள் 25பேருக்கு பூநகரி மகாவித்தியாலயத்திலும், 21ஆம், 22ஆம் திகதிகளில் தருமபுரம் மேற்கு கிழக்கு விசுவமடு சேமிப்புக்குழு உறுப்பினர்கள் 30 பேருக்கு கரைச்சிப்பிரதேச வடக்கு அபிவிருத்தி நிறுவன மண்டபத்திலும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

பயிற்சியினை கல்வித் திணைக்கள ஆசிரிய ஆலோசக அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அதற்கான தீர்வுகள் போன்ற விடயங்களை உள்ளடக்கிய பயிற்சியினை வழங்கினர்.

கண்டாவளையில் நடைபெற்ற பயிற்சியில் கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் கலந்துகொண்டு சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கருத்துக்களை பகிர்ந்தார். இப்பயிற்சி கண்டாவளைப் பிரதேச இணைப்பாளரின் நன்றியுரையுடன் நிறைவுபெற்றது.

# செட்டிகுளம் பி.செ பிரிவில் வரட்சியால் 3190 குடும்பங்கள் பாதிப்பு

(செட்டிகுளம்)

வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவில் 3190 குடும்பங்கள் வரட்சியால் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாக செட்டிகுளம் பிரதேச செயலாளர் செல்வி. துரைசாமி தெரிவித்துள்ளார். வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கான நிவாரணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.வரட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இருக்கின்ற 15 கிராமங்களுக்கு தண்ணீர் தாங்கி மூலம் குடி நீர் விநியோகிக்கப்படுவதாகவும் தெரிவித்தார். கடந்த சில தினங்களாக மழை பெய்கின்ற போதும் குடி நீருக்கே அதிகளவான பிரச்சினை இருப்பதாகவும், செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் உள்ள 27 குளாய்க் கிணறுகளில் 12 கிணறுகள் திருத்தப்பட்டு மக்களின் பாவனைக்காக கொடுக்கப்பட்டுள்ள போதும், 15 கிணறுகள் திருத்த முடியாத நிலை ஏற்பட்டு இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார் புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் 652 குடும்பங்கள் மீள குடியமர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (21)

# அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் 5 ஆம் திகதி கிளிநொச்சி அரச செயலக மாநாட்டுமண்டபத்தில் நடைபெறவுள்ளது.இந்து சமய கலாசாரஅலுவலகத்தால் ஒழுங்கு செய்யப்பெற்று கிளிநொச்சிஅரச அதிபர் தி.இராசநாயகம் தலைமையில் அன்றைய தினம் காலை 8.30மணிதொடக்கம் பிற்பகல் 4.00மணி வரை நடைபெறவுள்ள மேற்படி கருத்தரங்கில் கிளி.மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமவண்ணம் கிளி.மாவட்ட மேலதிக அரச.அதிபர் கா.வேதநாயகன் வேண்டியுள்ளார். (சோ,கு)


வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம்

THE VANNI AGROTECHS

வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனத்தின் விற்பனைக்குப் பிந்திய சேவை

ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணை வட்டக்கச்சியில் நடைபெறும் பொருண்மியக் கண்காட்சியின்போது "பிறவுண்" அன் கம்பனியும் "ஹேலீஸ்" அக்ரோ புரொடக்ஸ் நிறுவனத்தையும் இணைத்து எம்மால் விற்பனை செய்யப்பட்ட 'ரபே - TAFE'' உழுபொறிகளுக்கும், "ஹெய்ஸ்பிறே - Hayspray" தெளிகருவிக்குமான விற்பனைக்குப்பிந்திய சேவையை வழங்கவுள்ளோம்.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பயன்பெறுமாறு அனைத்து வழமையாளர்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இடம் : ஒருங்கிணைந்த மாதிரி விவசாயப்பண்ணை

காலம் : 02.09.2004 - 04.09.2004

தொலைபேசி இல: 2285745, தொலைநகல் : 2285746.

வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம், கண்டிச்சாலை, கிளிநொச்சி.

(கி.10207)

# பயங்கரவாதத்திற்கெதிராக சனாதிபதி புஷ் மேற்கொள்ளும் யுத்தம் தவிர்க்க முடியாத ஒன்று

## குடியரசுக் கட்சி மாநாட்டில் நியூயோர்க் நகர மேஜர்

(வோஷிங்டன்)

**பயங்கரவாதத்திற்கு எதிராக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் மேற்கொண்டுவரும் யுத்தம் தவிர்க்க முடியாத ஒன்று என்று நியூயோர்க் நகர செனட்டர் ஜான் மெக்கோவ் கூறியுள்ளார்.**

நியூயோர்க்கில் நடைபெற்று வரும் குடியரசு கட்சியின் மாநாட்டில் இரண்டாம் நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இரண்டாவது தடவையாகவும் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷை அமெரிக்க சனாதிபதியாகத் தேர்வு செய்வதற்கு தமது ஏகோபித்த ஆதரவைத் தெரிவிப்பதற்கான குடியரசு கட்சியின் மாநாடு நேற்று முன்தினம் முதல் நடந்து வருகின்றது.

நியூயோர்க் நகரம் முழுவதும் மிகுந்த கண்டனப் போராட்டங்களுக்கு மத்தியிலும் நேற்றும் மாநாட்டின் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

கடுமையான தீர்மானங்களை மேற்கொள்ளக் கூடியதும் எடுக்கக் கூடியதுமான தலைமைத்துவமே தற்போதைய நிலையில் நாட்டிற்குத் தேவை என்று கூறியுள்ளார்.

2001 செப்ரெம்பரில் பயங்கரவாதத் தாக்குதலுக்கு இலக்கான உலக வர்த்தக மையக் கட்டடத்திற்கு அண்மையிலுள்ள மண்டபத்தில் பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் மாநாடு நேற்றும் நடந்துள்ளது.

இந்த மாநாட்டில் நேற்று உரையாற்றிய நியூயோர்க் நகர மேஜர், யுத்தம் மற்றும் பயங்கர சூழ்நிலைக்கு அமெரிக்கா முகம் கொடுக்கும் வேளையில் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் போன்ற தலைமைத்துமே நாட்டிற்கு தேவை என்று கூறியுள்ளார். அத்துடன் சனநாயகக் கட்சி வேட்பாளரான ஜோன் கெரியிடம் இவ்வாறன தெளிவான நிலையான தூரநோக்கு இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.



ஈராக்கில் எரிபொருள் கடத்தப்படுவதைத் தடுக்க ஈராக்கியப் படையினர் இரண்டு தாங்கிகளைச் சோதனையிடுகின்றனர்.


# பிரான்சிய பத்திரிகையாளரை விடுவிக்க தீவிரவாதிகள் நிபந்தனை

(பாக்தாத்)

ஈராக்கிய தீவிரவாதிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பிரஞ்சு செய்தியாளர்கள் இரண்டு பேர் ஷியாப் முகாதீன் மீதான தடையை நீக்கி தமது உயிரை காப்பற்ற உதவுமாறு பிரான்ஸ் அரசாங்கத்திடம் கோரியுள்ளனர். இவர்களது வேண்டுகோள் அடங்கிய வீடியோ நாடாவை அல்ஜசீரா தொலைக்காட்சி நிறுவனம் ஒளிபரப்பாக்கியிருக்கின்றது.

செய்தியாளர்களைக் கடத்திய கிளர்ச்சியாளர்கள் தமது நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்காக விதிக்கப்பட்ட காலக்கெடுவை மேலும் 24 மணித்தியாலங்களினால் நீடித்திருக்கின்றார்கள். பிரான்ஸ் பாடசாலைகளில் முஸ்லிம் பெண்கள் பர்தா அணிவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்படா விட்டால் பணயக்கைதிகளை சிரைச்சேதம் செய்யப்போவதாக எச்சரித்துள்ளார்கள்.

இதேவேளை இந்தக் கைதிகள் விவகாரம் குறித்து ஆராய பிரான்சிய வெளிவிவகார அமைச்சர் ஈராக்கிற்குச் சென்றுள்ளார்.





பலஸ்தீன மேற்குக் கரைப்பகுதியில் இஸ்ரேலிய படையினரால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்படும் பலஸ்தீன இளைஞனையும், அவரை விடுவிக்கக் கோரி இஸ்ரேலிய இராணுவ வாகனத்திற்கருகில் உட்கார்ந்திருக்கும் பலஸ்தீன இளைஞனின் தாயார்.

# 210 கி.மீ வேகத்தில் யப்பானில் புயல்

(ரோக்கியோ)

யப்பானில் பலத்த புயல் வீசத்தொடங்கியுள்ளது. இதில் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் ஆயிரக்காணக்கான மக்கள் வீடுகளை இழந்துள்ளனர். யப்பானின் தென்மேற்குப்பகுதியில் நேற்று முன்தினம் கடும் புயல் வீசியுள்ளது. மணிக்கு 210 கிலோமீற்றர் வேகத்தில் இந்தப் புயல் வீசியதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டதால் 10 அடி உயரத்திற்கு அலைகள் எழும்பியுள்ளன. நான்கு முக்கிய நகரங்களில் மின் விநியோகம் முற்றாகப் பாதிப்புற்றது.

எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களிலும் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

புயல் காரணமாக பலத்த மழை பெய்து வருவதால் ஆறுகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்றது. இதனால் யப்பான் பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

# பிரிட்டனுக்குக் குழந்தைகளைக் கடத்திய கென்ய குழு பொலிசாரிடம் சிக்கியது

கென்ய நாட்டு பொலிசார் குழந்தைகளைத் திருடியதாகக் கூறப்படும் நபர்களைக் கைது செய்துள்ளனர்.

இவர்கள் கென்யாவிற்கும், பிரிட்டனிற்குமிடையிலான கடத்தல் வலையமைப்புடன் இணைந்து செயற்படுவதாக அறிவிக்கப்படுகின்றது.

இதனடிப்படையில் 20 இற்கும் மேற்பட்ட குழந்தைகளை அதிகாரிகள் கைப்பற்றி இருக்கிறார்கள். இவர்களை வைத்திருந்தவர்களில் ஒருவர் பிரிட்டனை மையமாகக் கொண்டியங்கும் சர்ச்சைக்குரிய மத போதகரின் மனைவியென்பது குறிப்பிடத்தக்கது.

## பா.ஜ. கட்சி மீது கருணாநிதி கண்டனம்

(சென்னை)

"பார்லிமென்ட்டைத் தினந்தோறும் நடத்த விடாமல் செய்து மத்தியில் ஆட்சியை கவிழ்த்துவிட பா.ஜ. வினர் முயற்சி செய்கிறார்கள்" என்று தி.மு.க. தலைவர் கருணா நிதி குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் நேற்று நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்; மணிசங்கர் ஐயரின் உருவப் பொம்மையைச் செருப்பால் அடித்து சிவசேனா போராட்டம் நடத்தியுள்ளது அநாகரிகமான காட்டுமிராண்டித்தனமான செயல். இதனை வன்மையாகக் கண்டிக்கிறேன் எனவும் தெரிவித்தார்.



இரசாயன வாயுக் கசிவு ஏற்பட்டால் எப்படிச் சமாளிப்பது என்பது குறித்த சீனத் தீயணைப்புப் படையினரின் ஒத்திகை.

# காணாமற் போவோர் தொகை நேபாளத்தில் அதிகரிப்பு

(காத்மாண்டு)

நேபாளத்தில் காணாமற் போனவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை குறித்து ஐக்கிய நாடுகள் சபையும், மனித உரிமை அமைப்புக்களும் கவலை தெரிவித்துள்ளன.

காணாமற் போனவர்கள் தொடர்பான சர்வதேச தினத்தில் இது தொடர்பான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மாத்திரம் 378 பேர் தலைமறைவாகியிருப்பதாக லண்டனை மையமாகக்கொண்டு இயங்கும் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. இது முன்னைய 5 ஆண்டுகளில் காணாமற் போனவர்களின் மொத்தத் தொகையை விட அதிகமானதென்று கூறப்படுகின்றது.

### -நக்கீரன் கோபால் மீதான-

# பொடோ வழக்கு நியாயமானதா? கண்டறிய உச்ச நீதிமன்று பணிப்பு

நக்கீரன் கோபால் மீது பொடோ வழக்குப் போட்டது நியாயமானது தானா என்று செப்ரெம்பர் 30ஆம் திகதிக்குள் விசாரித்து தீர்ப்பளிக்க வேண்டும் என்று மத்திய உச்சநீதி மன்றம் பொடோ ஆய்வுக்குழுவிற்கு உத்தரவிட்டுள்ளது. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி லகோதி, மாத்தூர், தருண் சட்டர்ஜி ஆகியோர் கொண்ட பெஞ்ச் இந்த ஆணையைப் பிறப்பித்துள்ளது.

நக்கீரன் கோபாலின் சகோதரர் குருமூர்த்தி தாக்கல் செய்த மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம் கோபாலுக்குக் கடந்த டிசம்பர் மாதம் பிணை வழங்கியது. இதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மேல் முறையீடு செய்தது. அப்போது விசாரணை நடத்திய நீதிபதிகள் நக்கீரன் கோபால் மீது போடப்பட்டுள்ள பொடோ வழக்கு நியாயமானது தானா என்பது குறித்து நான்கு வாரகாலத்திற்குள் விசாரணை செய்து தீர்ப்பளிக்க வேண்டும். என்று மத்திய பொடோ ஆய்வுக் குழுவுக்கு உத்தரவிட்டனர்.

எனினும் இக்குழுவின் நீதிபதி சகாரிய வெளிநாடு சென்றிருந்ததால் இந்த வழக்கு விசாரிக்கப் படவில்லை. இந்நிலையிலேயே இவ்வழக்கு விசாரணை உச்ச நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது..

# நதிகள் இணைப்புத்திட்டம் கைவிடப்படவில்லை இந்திய மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் உறுதி

(புதுடில்லி)

நதிகள் இணைப்புத் திட்டத்தினை மத்திய அரசு கைவிடவில்லை என்றும், அமைச்சரவைக் கூட்டத்தில் இது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்றும் மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் உறுதி அளித்தது.

பருவமழை, நதிநீர், பாசனநீர், குடிநீர் விவகாரங்கள் நம் நாட்டில் மிகப்பெரும் பிரச்சினைகளாக உருவெடுத்து வருகின்றன. நாட்டின் வடக்குக் கிழக்கு மாநிலங்களில் பலத்த மழையால் கங்கை, பிரம்மபுத்ரா நதிகளில் பெருவெள்ளம் பாய்கிறது. வடமேற்கு, தென் மாநிலங்களில் பருவமழைக்குறைவால் வரட்சி தாண்டவமாடுகிறது. தாக்குப்பிடிக்க முடியாத விவசாயிகளின் தற்கொலைப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.இந்த இரு வேறு பிரச்சினைகளைச் சமாளிக்க வடமாநிலங்களில் பாய்ந்து வீணாகக் கடலில் கலக்கும் கங்கை நதியைத் தென்மாநிலங்கள் வழி யே காவிரி வரை திருப்பி விடவேண்டும் கங்கை, காவிரி இணைபபுத் திட்டத்தைச் செயற்படுத்த வேண்டும். அதுதான்இதற்கு நிரந்தர தீர்வு என்று நீண்ட காலமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. இது தொடர்பாக முன்னாள் மத்தியமைச்சர் சுரேஷ் பிரபு தலைமையில் கடந்த தே.ஜ. கூட்டணி ஆட்சியில் ஒரு செயற்றிட்டக்குழு அமைக்கப்பட்டது என்றும் மத்தியரசு தெரிவித்துள்ளது..



மலேசியாவின் 47 ஆவது சுதந்திரதினமான நேற்று தலைநகர் கோலாலம்பூரிலிருந்து 186 மைல் கிழக்கே அதன் தேசியப்படையினரின் அணிவகுப்பு.

# வரட்சியால் மிகமோசமாகப் பாதிப்புற்றுள்ள மன்னார் மாவட்டத்திற்கு உதவி வழங்குக

-சமூக சேவைகள் அமைச்சருக்கு வேண்டுகை

(மன்னார்)

**மன்னாரில் தொடரும் வரட்சியால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஏனைய பாதிக்கப்பட்ட மாவட்டங்களுடன் இணைத்து நிவாரண உதவிகளை வழங்குமாறு சிறிலங்காவின் சமூக சேவைகள் அமைச்சருக்கு மன்னார் மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இது தொடர்பாக அனுப்பி வைத்துள்ள மகஜரின் பிரதிகள் மன்னார் அரச அதிபர், மன்னார் ஆயர் மற்றும் மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவருக்கும் கையளிக்கப்பட்டுள்ளன.

அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது; நாட்டில் விவசாயத்தைப் பிரதான தொழிலாகக் கொண்ட மாவட்டங்களில் மன்னாரும் ஒன்று என்பதைத் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றோம்.

இம்மாவட்டத்தில் மொத்தமாக 26,265 ஏக்கர் காணி கட்டுக்கரை மற்றும் சில பிரதான நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் விவசாயத்திற்குரியதாகும். வன்செயல்களுக்கு முந்திய காலங்களில் இந்தப் பரப்பளவு முழுவதும் விவசாயத்திற்குட்படுத்தப்பட்டு வந்தது.

ஆனால் கடந்த சுமார் 25 வருட யுத்த காலத்தில் மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்ததுடன், அவர்களது அன்றாட சகஜ வாழ்வை இழந்ததுடன், அவர்களது பொருளாதார நிலையும் முற்றாக முடமாகியது. மக்கள் பட்டினிச்சாவின் விளிம்பிற்கே தள்ளப்பட்டனர்.

இருப்பினும் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் மக்கள் ஓரளவு நிம்மதிப் பெருமூச்சுவிட்டு தமது விவசாய முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்குடன் தமது வாழ்விடங்களுக்குத் திரும்பினர். ஆனால் அவர்களது எதிர்பார்ப்புக்கு மாறாக சுலபமாக நீர் பாய்ச்சக்கூடிய காணிகளில் பெரும்பாலானவை படையினரின் உயர்பாதுகாப்பு வலயப்பகுதிக்குள் அடக்கப்பட்டுவிட்டன.

எனவே மக்களுக்கு மாற்று வழியேதுமின்றி குளங்களுக்குச் சற்றுத் தொலைவில் இருந்த காணிகளிலேயே தமது விவசாய முயற்சிகளை மேற்கொள்ளக் கூடியதாய் இருந்தது.

இவ்வண்ணமாக 2003/04 ஆண்டு காலபோகம் மற்றும் சிறுபோகத்திற்கு 12,500 ஏக்கர் பொருத்தமானது என விவசாய/ நீர்ப்பாசனத் திணைக்களங்களால் இனம் காணப்பட்ட போதிலும் பலவித கட்டுப்பாடுகள் காரணமாக 10620ஏக்கர்காணிகளையே விவசாயத்திற்குட்படுத்த முடிந்தது. ஆரம்பத்தில் நல்ல விளைச்சல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் மன்னார், அனுராதபுர மாவட்டங்களிலும், கட்டுக்கரைக்குளத்திற்கு தண்ணீர் கொண்டு வரும் மல் வத்து ஓயா நதிப்படுக்கைப் பகுதிகளிலும் மழை இன்மையால் எமது மாவட்டம் முற்றிலுமாக பயிரிழப்பைச் சந்தித்துள்ளது.

மொத்தமாகச் செய்யப்பட்ட 10,620 ஏக்கரில் 6895 ஏக்கர் நிலத்தில் பயிர்கள் முற்றாக அழிந்ததுடன் 2815 குடும்பங்களும் முழுமையாகப்பாதிக்கப் பட்டுள்ளன. இதன் காரணமாக இம்மக்கள் அன்றாடஉணவுக்கு வழியற்று இருப்பது மட்டுமல்ல, இவ்வாண்டு காலபோக செய்கைக்குத் தேவையானவிதை நெல்தேவைகளையும் பூர்த்தி செய்யமுடியாதிருக்கின்றனர்.

எனவே தயவு கூர்ந்து வரட்சி நிவாரண உதவித்திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தையும் சேர்த்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும்படி பணிவுடன் கோருகின்றோம்.

## கழுதைகளால் தொல்லை

(மன்னார்)

மன்னார் நகரில் கழுதைகள் தொல்லையால் மக்கள்பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.நகர வீதிகளில் பெருமளவு கழுதைகள் நடமாடித் திரிகின்றன. இவை வீதியால் செல்வோரைஉதைப்பதுடன், தட்டி விழுத்தும் காட்சிகள் நாளாந்தம் அதிகமாக இடம்பெற்று வருகின்றன. (மி)

## 'ஆதாரம்' இன்று வெளிவருகிறது

(கிளிநொச்சி)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்தித்தொடர்பு வெளியீட்டுப் பிரிவினரால் வெளியிடப்படும் சமூக பொருண்மிய விஞ்ஞான ஆய்வு இதழான ஆதாரம் இதழின் 41 ஆவது இதழ் இன்று வெளிவருகின்றது.

பல விடயங்களைத் தாங்கி வெளிவந்துள்ள இவ்விதழில் புழுதியாறு நீர்த்தேக்கத்தின் வருகையும் வரலாறும், மண்ணெனும் வளம், திட்டமிடலும் கருத்திட்ட உருவாக்கமும், இரணைமடுக்குளத்தின் நீர்வளப் பேணுகையில் நியாப் திட்டம்-2 இன் பங்களிப்பு, மாடுகளிற்கு ஏற்படும் தொண்டை அடைப்பான் நோய், கிராமிய அபிவிருத்தி வங்கி முயற்சியாளர்களின் குடும்ப வங்கி, மிளகாய்ச் செய்கையும் இலைச்சுருள் நோயும்,யோக்கட் உற்பத்தியும் அதன் சிறப்புத் தன்மையும், சுக்கில பாயத் தராதரத்தின் முக்கியத்துவம், வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டம் (NEIAP) கடந்து வந்த ஒரு கண்ணோட்டம், கருணை, இராசவள்ளி, வற்றாளை, இஞ்சிச் செய்கை, அபிவிருத்தி என்ற பதம், வனம் தரும் வளம் போன்ற கட்டுரைகளும்; ஆதிலட்சுமி-சிவகுமாரின் மாறுதல் சிறுகதையும், யூன்-யூலை மாதங்களின் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், கறுக்காக்குளம், கிருமி அழிக்கப்பட்ட பால் போன்ற விபரணக் கட்டுரைகளும்; தாவர இனப்பெருக்கம் செய்வதில் வல்லவரான ம.திருஞானசம்பந்தருடனான நேர்காணல் மற்றும் தகவல்துளிகள்,தேடல் அருவி போன்றவிடயங்களையும் தாங்கி இவ்விதழ் வெளிவந்துள்ளது. (15)




மன்னார் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் அண்மையில் நடத்திய கிராமமட்டப் பிரதிநிதிகள், அரசஊழியர்கள், விவசாயிகள், மீனவர்கள், பாடசாலை உயர்தர மாணவமாணவிகளுக்கான, முரண்பாட்டு உணர்வுகள், பயிற்சியில் சிறப்புரையாற்றிய மன்னார் வீதிகள் அதிகாரசபை எந்திரி ஏ.குரூஸ் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முகம் கொடுப்பது எவ்வாறு என விளக்குகின்றார். அருகில் வள அணியினர் பாஸ்க (வாழ்வுதயம்), பீற்றர் சின்கிலேயர் (CHA) அமர்ந்திருக்கின்றனர்.

(படம்.மிராண்டா)

## அரச திணைக்களத் தண்ணீர் தாங்கிகள் மூலம் வரட்சியால் பாதிப்புற்றோருக்கு உதவ முடிவு

(செட்டிகுளம்)

வவுனியா மாவட்டத்தில் வரட்சி காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள 22 ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு உதவி செய்யும் முகமாக அரச திணைக்களங்களுக்குச் சொந்தமான தண்ணீர் தாங்கிகளைப் பாவிப்பதற்கு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் தற்போது அதிகளவான பிரதேசங்கள் வரட்சி காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வவுனியா மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுவதற்கு என்று 5மில்லியன் ரூபா ஒதுக் கப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்திற்கு என்று 20 தண்ணீர் தாங்கிகள் ஒதுக்கப்பட்டுள்ளமையும், இதில் 10 தண்ணீர் தாங்கிகள் வவுனியா பிரதேச காரியாலயத்திற்கு உட்பட்ட பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (21)

## விசுவமடுப் பிரதேச முன்பள்ளி சிறார்களின் கண்காட்சி

(புதுக்குடியிருப்பு)

விசுவமடுப்பிரதேச முன்பள்ளிகளிற்கிடையிலான கண்காட்சிப் போட்டி கடந்த சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

ஆசிரிய ஆலோசகர் ஜெயம் சபாபதி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கினை முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜாவும் "தளிர்கள்" முன்பள்ளி நிர்வாகப் பொறுப்பாளரும் ஏற்றிவைக்க, தேசியக் கொடியை முல்லைமாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சின்னண்ணர் ஏற்றிவைத்தார்.

ஆசியுரையை த.குருகுலராஜாவும் சிறப்புரையை சின்னண்ணரும் வடக்கு கிழக்கு முன்பள்ளிகளின் இணைப்பாளர் கணேசலிங்கமும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது கண்காட்சி மண்டபத்தை முல்லை வலயக் கல்விப்பணிப்பாளரும், இரண்டாவது மண்டபத்தை வடக்கு கிழக்கு முன்பள்ளிகளின் இணைப்பாளரும் , மூன்றாவது மண்டபத்தை முல்லைமாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் செல்வநாயகமும் திறந்து வைத்தனர். நடுவர் குழுவினால் கண்காட்சி அம்சங்கள் பார்வையிடப்பட்டு மிகவும் தரமான 30 காட்சிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (08)

## -க.பொ.த. (உ/த)வில் கல்விகற்கும்- வசதி குறைந்த மாணவர்கள் புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்குக

க.பொ.த உயர்தர வகுப்புக்களில் கல்விபயிலும் வசதிகுறைந்த மாணவர்களுக்கு மிலேனியம் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன. வடக்கு, கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கல்வி பயிலும் உயர்வகுப்பு மாணவர்கள் தமது விண்ணப்பங்களை தாமதிக்காமல் உடனடியாக பாடசாலை அதிபர்களின் ஊடாக வலயக்கல்வி அலுவலகங்களில் கையளிக்குமாறு மாகாணக் கல்விப்பணிப்பாளர் இ.விசாகலிங்கம் கேட்டுள்ளார். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதிக்கு முன்னர் சனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டியுள்ளதால், உடனடியாக விண்ணப்பிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

## கடந்தவாரம் பாம்புக்கடிக்கிலக்காகி பத்திற்கும் மேற்பட்டோர் சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

கடந்த வாரத்தில் பத்திற்கும் மேற்பட்டோர் பாம்பினால் கடியுண்டதன் விளைவாக கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுச்சென்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

நேற்று முன்தினம் வன்னேரிக்குளம் கிராமத்தில் இளைஞர் ஒருவர் வயலில் அரிவு வெட்டிக் கொண்டு நின்றபொழுது புடையன் பாம்பு பின்னால்வந்து தீண்டியதன் விளைவாக அக்கராயன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சையின் பொருட்டு கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொண்டு வருகின்றார்.

பிரபாகரன் (வயது 26) என்ற இளைஞரே மேற்படி பாம்பினால் கடியுண்டதன் விளைவாகத் தற்போது சிகிச்சை மேற்கொண்டு வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

## மது போதையில் வாகனம் செலுத்திய சாரதியின் செயலால் அவலம்

–இரு உந்துருளிகள் விபத்தில் சிக்கின

(அலுவலக செய்தியாளர்)

மதுபோதையில் கன்டர் வாகனத்தினை ஓட்டிய சாரதியினைக் கைது செய்த தமிழீழ காவல்துறை வாகனப்போக்கு வரத்துப் பிரிவினர் கன்டர் வாகனத்தையும் தடுத்து வைத்துள்ளதுடன் நீதிமன்றில் முற்படுத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 5.00 மணியளவில் மேற்படி வாகன சாரதி மதுபோதையில் பரந்தன் உமையாள்புரம் பகுதியில் ஏ-9 பிரதான வீதியோரத்திலிருந்து சமிக்ஞைகள் எதுவுமின்றி மறு கரைக்குத் திடீரெனக் கன்டர் வாகனத்தினைச் செலுத்தியபொழுது பின்புறமாகப் பயணித்துக் கொண்டிருந்த இரு உந்துருளிகளில் பயணித்தவர்கள் மேற்படி வாகனத்துடன் மோதவுள்ளதை அறிந்து நிறுத்த எத்தனிக்கையில் இரு உந்துருளிகளும் பாதையை விட்டுவிலகி தடம்புரண்டதில் உந்துருளி ஒன்று சேதத்திற்குள்ளாகியதுடன், உந்துருளியில் பயணித்த மூன்று வயதுப் பெண்குழந்தை தலையில் காயமடைந்த நிலையில் கிளி .மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப் பெற்றுள்ளது.

தகவலறிந்து ஸ்தலத்திற்கு விரைந்த தமிழீழ காவல்துறை வாகனப் போக்குவரத்துப் பிரிவினர் விசாரணையினை மேற்கொண்டதுடன் ,சாரதியினையும் கன்டர் வாகனத்தினையும் காவல் பணிமனையில் தடுத்து வைத்து நேற்று நீதிமன்றில் முற் படுத்தினர்

மது போதையில் சாரதி கன்டர் வாகனத்தை வீதியில் செலுத்தியமையே உந்துருளியில் பயணித்தவர்களுக்கு இந்த அவலநிலை ஏற்படக் காரணமாக விருந்ததென அவ்விடத்தில் கூடியிருந்த மக்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (சோ.கு)

# இராணுவச் சிப்பாயைத் தாக்கிய அதிகாரிக் கெதிராக
# சிப்பாயின் மனைவி ம.உ.ஆணைக்குழுவிடம் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

**விடுமுறை கோரிய தனது கணவரை மோசமாகத் தாக்கிய படை அதிகாரிக்கு எதிராக உரிய ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கக் கோரும் மனுவொன்றைப் படைச்சிப்பாயொருவரின் மனைவி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் சமர்ப் பித்துள்ளார்.**

தென்னிலங்கையின் கடவத்த பகுதியைச் சேர்ந்த மாலினி ஜெய சிங்கபண்டார எனும் பெண் மணியே இம்மனுவைச் சமர்ப்பித் துள்ளார்.

இது தொடர்பாக அம் மனுவில் மேலும் தெரிவிக்கப்படுகையில்; "தனது கணவரான கோப்ரல் ஜெயசிங்க பண்டார இலங்கை இராணுவத்தில் பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தில் நீண்ட காலமாக பணியாற்றி வரு கின்றார். எனினும் நீண்ட நாட்களாக வீடு திரும்புவதற்கான அனுமதியை அதிகாரிகள் அவருக்கு வ்ழங்கி யிருக்கவில்லை. இந்நிலையில் இம்மாத முற்பகுதியில் விடுமுறை யில் வீடு செல்வதற்கான விண் ணப்பமொன்றை அவர் உயரதி காரியிடம் சமர்ப்பித்திருந்தவேளை அவ்விடுமுறை விண்ணப்பத்தை நிராகரித்த படை அதிகாரி அவரை மிக மோசமாகத் தாக்கியுள்ளார். இதனால் அவர் பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை க்காக அனுமதிக்கபட்டிருந்தார். பின்னர் உடல் நலம் சுமுக நிலைக்குத் திரும்பியிருந்த போதும் அவர் வீடு திரும்ப இது வரை அனுமதிக்கப்படாது பலாலி முகாமில் கடமையாற்ற நிர்ப்பந் திக்கப்பட்டுள்ளார்'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.இதனிடையே மேற்படி இராணுவச் சிப்பாயின் மனைவி செய்துள்ள புகார் தொடர் பாக விசாரணைகளை மேற் கொண்டு அறிக்கை சமர்ப்பிக் குமாறு பலாலி தலைமையகத்தை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி கோரியுள்ளார். (27)

## ஆ.அ.வங்கி நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.-பருத்தித்துறை வீதி மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து முக மாலைவரையான கண்டி வீதியை புனரமைத்து அகலமாக்கு வதற்கு நிதியுதவி வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந் துள்ளது.

## பாடசாலை மீண்டும் இராணுவமுகாமாகுமா?
## எழுதுமட்டுவாள்-மருதங்குள மக்கள் அச்சம்

(தென்மராட்சி)

எழுதுமட்டுவாள் வடக்கு மருதங்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையை சிறிலங் காப் படைகளின் ஆக்கிரமிப்பில் இருந்து பல போராட்டங்கள் மத்தியில் மீட்டெடுத்த இப்பகுதி மக்கள், இதுவரை பாடசாலை திறக்கப்படாததால் மீண்டும்அது சிறிலங்கா பாடைகளின் இராணுவ முகாமாக மாறும் சூழ்நிலை ஏற் பட்டிருப்பதாக இப்பகுதி மக்கள் அச்சம்தெரிவிக்கின்றனர்.

பாரிய படைமுகாம்கள் சூழ்ந் துள்ள இப்பகுதியில் பாடசாலை திறக்கப்படுவதன் மூலம் மீள் குடி யேற்றங்களை இப்பகுதியில் கொண்டுவரமுடியும் என இப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே பாடசாலையை உடனே திறந்து கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும் என மக்கள் தொடர்ந்து கோரி வரும் நிலையில், தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனை கடிதம் மூலம் ஆணைப்பிறப்பித்தும் இப் பாடசா லையின் அதிபர் பாடசாலையைத் திறக்க நடவடிக்கை எடுக்கா திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (28)

## மிதிவெடி அகற்றும் பணி சுழிபுரத்தில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சுழிபுரம் பகுதியில் மிதி வெடிகளை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மிதி வெடிகள் அகற்றும் செயற்பாடுகளுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேற்படி பிரதேசத்தில் படையினரால் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் காணப்படும் மிதிவெடி அபாயம் காரணமாக அங்குள்ள பல பகுதிகளில் மக்கள் மீளக்குடியமரச் செல்லமுடியாத நிலை காணப்படுகிறது.

இந்நிலைமையைக் கவனத்திற் கொண்டே மேற்படி பிரதேசங்களில் படையினரால் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதி வெடிகளை அகற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (33)

## மண்டைதீவு வைத்தியசாலையைப் புனரமைக்க சிறிலங்கா கடற்படையினர் தொடர்ந்து தடைவிதிப்பு

–மீளக்குடியேறிவரும் மக்கள் அவதி

(தீவகம்)

யாழ்.மண்டைதீவு வைத்திய சாலையைப் புனரமைத்து மீள இயங்கச் செய்வதற்கு கடற் படையினர் தொடர்ந்தும் முட்டுக் கட்டையாக இருந்து வருகின்றனர். மண்டைதீவு கடற்படையினரது அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருக்கின்ற போதும் படையினரின் கட்டுப்பாடுகள், நிபந்தனைகள் மத்தியிலும் தற்போதுள்ள யுத்த நிறுத்தச் சூழ்நிலையைப்பயன் படுத்திக் குறிப்பிட்ட பகுதியில் மட்டும மக்கள் படிப்படியாக மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

எனினும் இங்கு குடியேறி வாழத் தொடங்கியுள்ள மக்களுக் கென அரச மருத்துவமனை ஒன்று இல்லாததால் மீளக்குடியமர்ந்து வரும்மக்கள் தமக்கான வைத்திய சேவையைப் பெற்றுக் கொள் வதில் பல சிரமங்களையும் எதிர் கொண்டுள்ளனர். இதனைக் கவனத்திற் கொண்டு மண்டை தீவில் தற்பொழுது இடிந்த நிலையிலுள்ள மண்டைதீவு அரச வைத்தியசாலையைப் புனரமைத்து மீள இயக்க பல்வேறு தரப்பி னரும் நடவடிக்கை எடுத்த போதி லும், தமது பாதுகாப்பின் அவசியத்தைக் காரணம்காட்டி இவ் வைத்தியசாலையைப் புனரமைக்கவோ, மீள இயக்கவோ கடற்படையினர் அனுமதி மறுத்து வருகின்றனர். இதனால் அங்கு குடி யமரச் சென்றுள்ள மக்கள் தமக்கான வைத்திய சேவைகளை உரிய நேரத் தில் பெறமுடியாது தொடர்ந்தும் அவ திப்பட்டு வருகின்றனர். (33)

## சாவகச்சேரி–புல்லாந்திக் குளத்தை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(தென்மராட்சி)

சாவகச்சேரி விளைவேலியில் உள்ள புல்லாந்திக்குளத்தை புனரமைக்க இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சாவகச்சேரி கல்வயல் கிராமசேவையாளர் பிரிவு ஜெ.305இல் இருக்கும் விளைவேலி கிராமத்தில் உள்ள புல்லாந்திக்குளத்தை உடனடியாக புனரமைப்புச் செய்யும்படி இப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

விவசாயத்தை நம்பி இப்பகுதியில் வாழும் மக்களுடைய நீர் ஆதாரமே இக்குளம் தான் என தெரிவிக்கப்படுகிறது. தற்பொழுது இக்குளம் தூர்ந்துபோகும் நிலையிலுள்ளதாலும், மாரிகாலம், நெருங்கிவருவதாலும், உடனே இவற்றைச் சரிசெய்து இப்பகுதி விவசாய மக்களின் ஜீவாதாரத்தை காக்கும்படி சம்பந்தப்பட்ட தரப்புக் களுக்கு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (28)

## லெப்.சீலனின் நினைவுப் பூங்காவை புனரமைக்க தே.எ.பேரவை கோரிக்கை

(தென்மராட்சி)

லெப்.சீலனின் நினைவுப் பூங் காவைப் புனரமைக்க கொடிகாமம் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

விடுதலை வரலாற்றில் தன்னி கரில்லாத் தாக்குதல் தளபதியாக வும், தேசியத்தலைவரின் நம்பிக் கையின் வடிவமாகவும் விளங்கிய லெப்.சீலன் சாள்ஸ் அன்ரனி அவர்களின் நினைவுச் சின்னமாய் விளங்கும் லெப்.சீலன் நினைவுப் பூங்காவை புனரமைப்புச் செய்து அவர் நினைவாக ஒரு புதிய கட்டடம் ஒன்றை நிறுவ வேண்டுமெனவும், அவர் வாழ்ந்த காலத்தில் அவரின் வசித்த வீட்டுக் குச் செல்லும் சீலன் வீதி என்று பெயர் சூட்டப்பட்டு அழைக்கப்பட் டது. வீதி தற்பொழுது பயன் படுத்தமுடியாத அளவுக்கு மணல் வீதியாக மாறியுள்ளதால் அத னைச் சீர்செய்து புனரமைக்கும் படியும் கொடிகாமம் தேசிய எழுச்சிப் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது. (28)

## இந்திய கைத்தொழில் துறைக்குழு இவ்வாரம் சிறிலங்கா வருகிறது

இந்திய கைத்தொழில் துறை குழு ஒன்று சிறிலங்காவுக்கு செப்ரெம்பர் முதல் வாரத்தில் விஜ யம் செய்யவுள்ளது.

இந்தக் குழு சிறிலங்காவில் முதலீடுகளை மேற்கொள்வது குறித்து ஆராயவுள்ளது.

ஏற்கனவே இந்தியாவுக்கு கடந்த மே மாதத்தில் சென்றிருந்த சிறிலங்காவின் முதலீட்டுக் குழு ஒன்று இந்திய முதலீட்டாளர்களை சந்தித்திருந்தது.

இதன் போது இந்திய நாட்டின் முதலீட்டாளர்கள் சிறிலங்காவில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என அவர்களால் விடுத்த வேண்டுகோளின் அடிப் படையிலேயே இந்த முனைப்பை இந்திய முதலீட்டாளர்கள் எடுத் துள்ளனர்.

பெரும்பாலும் கைத்தொழில் உபகரண வகைகள், விவசாய உற்பத்தியாளர்கள் மற்றும் சமையலறை உற்பத்தியாளர்களே தமது முதலீடுகளை மேற்கொள்ள வுள்ளனர். (32)

## யாழ்.கடல் உணவுப் பொருட்களுக்கு விரைவில் சிறந்த சந்தை வாய்ப்பு
## உ.உணவு ஸ்தாபனம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு மீனவர்களால் பிடிக்கப்படும் கடலுணவுப் பொருட் களுக்கு சிறந்த சந்தைவாய்ப் பினைப் பெற்றுக் கொடுக்க உலக உணவு விவசாய ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

யாழ்.மீனவர்களால் பிடிக்கப்படும் கடலுணவுகளுக்கு சிறந்த சந்தைப் படுத்தல் வசதிகள் இன்மையால் மீனவர்கள் பெரும் பொருளாதாரப் பாதிப்புக்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் இந்த இழப்புக் களைத் தவிர்ப்பதற்காகவே சிறந்த சந்தைப்படுத்தல் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்க உலக உணவு விவசாயஸ்தாபனம் முன்வந் துள்ளது. (33)

-யாழ்.முன்னணிப் பாடசாலைகளில்

## தரம்-1 மாணவர்களைச் சேர்ப்பதற்கு அதிபர்கள் நிபந்தனை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள முன் னணிப் பாடசாலைகளில் தரம்1 இற்கான மாணவர்களை இணைத் துக் கொள்ளும் பணிகள் ஆரம்பிக் கப்பட்டுள்ள போதும் இவ்வாறான பாடசாலைகளில் தமது பிள்ளை களை இணைத்துக் கொள்வதில் பெற்றோர்கள் பல்வேறு சிரமங் களையும் அனுபவித்து வருகின்ற னர்.

அதிகமான முன்னணிப் பாட சாலைகளில் நடைமுறையில் இருக்கும் இறுக்கமான நிபந்தனை கள், கட்டண அறவீட்டு முறைகள் போன்றன காரணமாகவே பெற் றோர்கள் பலவித நெருக்கடிகளை யும் அனுபவித்து வருகின்றனர்.

பாடசாலை அதிகாரிகளின் இறுக்கமான இந்நடைமுறைகள் காரணமாக வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள், பின் தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர். (33)

## பதினெட்டு வருடங்களாக புனரமைக்கப்படாத வீதி

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வியங்காட்டில் உள்ள விளையாட்டரங்க வீதி கடந்த 18 வருடங்களுக்கு மேலாக புனரமைப்புகள் எதுவும் செய்யப்படாத நிலையில் காணப்படுகிறது. நாளாந்தம் ஏராளமானோர் பயன்படுத்தி வரும் இவ்வீதியின் சீரற்ற தன்மை குறித்து யாழ். நல்லூர் பிரதேச சபையிடம் முறைபாடுகள் செய்யப்பட்ட போதும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இதனால் அப்பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

## ஆயுதங்களை ஒப்படைக்க மேலும் காலக்கெடு அறிவிப்பு

(கொழும்பு)

நாடுமுழுவதிலும் 35 ஆயிரம் சட்டவிரோத ஆயுதங்கள் உள்ள தாக மக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

சட்டவிரோத ஆயுதங்களைக் கையளிப்பதற்காகக் கொடுக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் இதுவரை 1350 ஆயுதங்களே கையளிக்கப்பட் டுள்ளதாகக் கூறும் மக்கள் பாது காப்பு அமைச்சு நாடுமுழுவதிலு முள்ள ஏனைய ஆயுதங்கள் பாதாள உலக கோஷ்ரியினரிடமும் ஏனையவர்களிடமும் உள்ளதாக வும் அவற்றை ஒப்படைப்பதற்கான காலக்கெடு இரண்டு மாதத்தில் அதாவது வரும் செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட் டுள்ளதாகவும் அது அறிவித்துள்ளது.

## தேரரின் கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மல்வத்தபீடாதிபதி பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது என்று ஜாதிகஹெல உறுமய வின் பாராளுமன்ற உறுப்பினர் ஓமல்பேசோபிததேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# 10 ஆவது ஆண்டில் முல்லை நகரில்....

01.09.2004 முதல்

உங்கள் நம்பிக்கையின் சின்னம்

தமிழீழ வைப்பகம் BANK OF TAMILEELAM

# தமிழீழ வைப்பகம்

வைப்பு வசதிகள்
- தேட்ட வைப்புக்கள்
- நிலையான வைப்புக்கள்

கடன் வசதிகள்
- தங்க அடைவுக் கடன் சேவை
- ஏனைய கடன் வசதிகள்

மேலும் பல வைப்பகப் பணிகள்

வாருங்கள் உங்கள் வளமான வாழ்வுக்கு வழிகாட்டுகின்றோம்

## தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

10204



# தமிழீழ வைப்பகத் திறப்பு விழாவினை வாழ்த்துகின்றோம்

தமிழீழ வைப்பகம் BANK OF TAMILEELAM

முல்லை நகரில் தன் கால் பதிக்கும்
தமிழீழ வைப்பகத்தினை வாழ்க வாழ்கவென

## வாழ்த்தி நிற்கும்

P.V.R நகைமாளிகை

அறிவு வைரவர் பல்பொருள் வாணிபம்

முதன்மைச் சாலை, முல்லைத்தீவு.

(சி-9186)

# ஆதவனின் அனுபவப் பகிர்வுகள்

என் அன்பு வாசகர்களே....! பறந்து கொண்டிருக்கிற விமானத்தில் அருகில் இருக்கும் பல்கேரியா உடல் வியாபாரப் பெண்ணைப் பார்த்தேன். அவள் கண்களை நேரே பார்த்த போது கூட எந்தவித சலனத்தையும் நான் காணவில்லை. வறுமை தான் அவள் உடலையே விற்கவேண்டும் என்ற நிலைக்கு அவளைத் தள்ளியிருக்க வேண்டும். அவள் தன் தொழிலைச் செய்கிறாள். நேர்மையாகச் செய்கிறாள் பயணம் முழுவதும் அவளிடம் பேசிக் கொண்டே போனேன்.

கிழக்கு ஐரோப்பாவின் வீழ்ச்சிபற்றி நிறையவே பேசினாள். அவளது இளமைக் கால கல்லூரி வாழ்வு பற்றிப் பேசினாள். அவளது பசுமையான செழிப்பான இளமைக்கால வாழ்வை அவள் கூறுகையில் அவள் கண்கள் கலங்கின.

மனிதர்கள் எப்படி எப்படியெல்லாம் வாழ்ந்து.... எப்படியெல்லாம் மாறி..... எங்கோ பிறந்து... எங்கோ வளர்ந்து.... எங்கோ... என்னென்னவோ தொழில் புரிந்து.......ம்......ம்..... என்னையும் அறியாமல் எனக்குள்ளே ஒருபெருமூச்சு வந்தது.

* * * *

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஜிப்ஸிகள் என்ற ஒருவகை நாடோடிக் கூட்டம் பரவத் தொடங்கியது. ஐரோப்பா வெங்கும் இந்தியாவில் காணப்படுகிற குற ஜாதி மக்கள் போல் இவர்களும் வித்தியாசமான ஒரு வாழ்வு முறையைக் கொண்டிருந்தனர். இவர்கள் கூட்டம் கூட்டமாக நாடோடிகளாகத் திரிவார்கள். இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன் இவர்கள் மிகச் சுதந்திரமாக எல்லா நாடுகளிற்கும் சென்று வந்தார்கள். இவர்களில் பலர் சிறந்த ஓவியர்களாகவும், இசைவிற்பன்னர்களாகவும் இருக்கிறார்கள். பரம்பரை பரம்பரையாக இவர்கள் பாசிமணிகளில் மாலை செய்தும், சின்னச் சின்ன ஆபரணங்கள் செய்தும் பச்சை குத்தியும், இசைக் கருவிகள் செய்தும் தமது காலங்களை ஓட்டி வந்தனர்.

எல்லா நகரங்களிலும் இவர்களைக் காணலாம். இரண்டாம் உலகப் போரின் போது சர்வாதிகாரி கிட்லர் யூதர்களைக் கொன்று குவித்து நாட்டை விட்டுத் துரத்தியது போல், இந்த ஜிப்ஸிகளையும் விரட்டியடித்தான். சுதந்திரமாகத் திரிந்த இந்த ஜிப்ஸிக்களின் வாழ்வில் புயல் வீச ஆரம்பித்தது. அவர்கள் சின்னாப்பின்னப் படுத்தப்பட்டார்கள். கூட்டங் கூட்டமான அவர்களது வாழ்வு சிதறடிக்கப்பட்டது. அவர்களது அற்புதமான இசைகளும் கலைகளும் சிதைந்து போயிற்று. கிழக்கு ஐரோப்பாவின் வீழ்ச்சி இவர்களை மேலும் பாதித்தது. 'செக்' குடியரசின் தலைநகரமாகிய 'ப்ராக்' நகரில் பல ஜிப்ஸிகர்கள் கரையொதுங்கி வாழ்ந்திருந்தனர், 'செக்' நாட்டின் வறுமை அவர்களை மேலும் வாட்டியது. அவர்கள் தங்கள் தனித்துவங்களை இழந்து மேற்கு ஐரோப்பாவெங்கும் சிதறினார்கள். ஒழுங்கான வாழ்வு இல்லாமல் நகர்ப்புறங்களில் பிச்சையெடுக்க ஆரம்பித்தார்கள். ஜேர்மனியின் "பிராங்போட்' நகரில் ஏராளமான பிச்சை எடுக்கும் 'ஜிப்ஸி'க்கள் இன்றும் இருக்கிறார்கள்.

இவர்களைப் பார்க்கப் பார்க்க.... யுத்தத்தின் கோரங்களும் சர்வாதிகாரத்தின் வெறியாட்டங்களும் ஒரு கணம் மனதில் நிழலாடி ஏக்கப் பெருமூச்சுக்களைக் கொண்டு வரும். ஒரு இனத்தின் தனித்துவங்கள் அழிந்து போய்.... மகோன்னதங்கள் ஒளியிழந்து போய்..... விளிம்பு நிலை மனிதர்களாகத் திரியும் இவர்களைப் பார்த்து தமிழினம் நிறையக் கற்றுக் கொள்ள வேண்டும இவர்களுக்கு தற்போது 'திருடர்கள்' என்ற பெயருண்டு அவர்கள் ஏமாற்றுவார்கள், காசைப் பறிப்பார்கள், ' சுப்பர் மார்க்கெட்டில் களவெடுப்பார்கள் என்றெல்லாம் பல அச்சுறுத்தல் நகர்ப்புறக் காவல்துறையினரால் வழங்கப்பட்டிருக்கிறது.

ஒரு முறை நான் புகையிரத்தில் 'பிராங்போட்டில் இருந்து 'டென்மார்க்' நோக்கி வந்து கொண்டிருந்தேன். அப்போது எங்கள 'கொம்பார்ட்மென்டில் அதிகம் பயணிகள் இருக்கவில்லை. எனக்கு முன்சீட்டில் ஒரு அழகிய இளஞ்சோடி அமர்ந்திருந்தது. இரவு முழுவதும் பயணம் செய்ய வேண்டிய பயணம் அது. எனக்குப் போதிய நேரம் இருந்தது. எனக்குத் தூக்கமே வரவில்லை. எல்லோரும் தூங்கிவிட்டார்கள். ஆக நானும அந்த இளஞ்சோடியும் தான் தூங்கவில்லை.

அந்தச் சோடி மிகவும் கலகலப்பாக இருந்தது. எனக்கு அவர்களுடைய நடை உடை பாவனை எல்லாம் ஏனைய வெள்ளையர்களிடம் இருந்து மாறுபட்டிருப்பது போறப்பட்டது.

அவர்களுடைய உடலசைவுகள் அவர்கள் பேசும் மொழி எல்லாமே என்னை வியப்பிலாழ்த்தியது. நாடகக் கலைஞனான எனக்கு அவர்களுடன் பேசவேண்டும் என்ற ஆவல் எழுந்தது.

அவர்களுடன் பேச்சை ஆரம்பிப்பது ஒன்றும் எனக்குச் சிரமமாக இருக்கவில்லை.

"Where you come from (எங்கிருந்து வருகிறீர்கள்) என்று கேட்டேன். கேட்டதுதான் தாமதம் அவர்கள் ஆளை ஆள்ப் பார்த்துச் சிரித்தார்கள். எனக் குத் தூக்கிவாரிப் போட்டது. எதற்காக இப்படிச்சிரிக்கிறார்கள்? ஏதும் பிழையாகக் கேட்டுவிட்டேனோ? என எனக்குள் குழம்பினேன். அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாதோ? என்றும் யோசித்தேன். ஆனால் அவர்களது சிரிப்பு நக்கலாகவோ, அல்லது ஏளனமாகவோ இருக்கவில்லை. அவர்கள் என்னைப் பார்த்துச் சிரிக்கவில்லை. தமக்குள் தாமே சிரித்தார்கள். சிறிது நேரத்தில் அந்தப்பெண் பேசஆரம்பித்தாள்.

"எங்களுக்கு என்று ஒரு நாடில்லை. நாங்கள் ஜிப்ஸிக்குழுக்களில் ஒன்று. எமது மூதாதையர் எல்லாம் நாடோடிகளாக சுதந்திரப்பறவைகளாகத் திரிந்தவர்கள். இப்பொழுது எல்லாரும் பிரிந்துவிட்டார்கள் இவன் என் தோழன். நாங்கள் நகரத் தெருக்களில் மாலைகள், மணிகள் விற்றுப் பிழைப்பு நடத்துகிறோம்."

என்றாள் அழகான குரலில், ஆனால் கொச்சையான கொஞ்சும் ஆங்கிலத்தில்; அவளது தோழனுக்கு அதிகம் ஆங்கிலம் பேசவராது என்பதை அவனது கபடமில்லாத புன்னகை காட்டிற்று.

நானும் அவளுக்கு ஒரு விடயத்தைக் கூறினேன். "எனக்கும் ஒரு நாடில்லை. நான் இங்கே அகதியாக வாழ்கிறேன்" என்று.

ஆவலுடன் இருவரும் எனது கதையைக் கேட்டார்கள். எனது நாட்டின் வரலாற்றையும் எமது மக்கள் பட்ட, படுகின்ற துயரங்களையும் அவர்களுக்குச் சொன்னேன். கண்கள் கலங்கியும் பெருமூச்சு விட்டுக்கொண்டும் அவர்கள் எனது கதையைக் கேட்டனர்.

எமது நாட்டில் நடந்த கோரச் சம்பவங்கள் சிலவற்றை சொல்லியிருந்தேன். நான் நாகர் கோவில் பள்ளிக்கூடத்

பாகம்-10

தில் குண்டுபோட்டு பள்ளிச்சிறார்கள் கொலையுண்ட கதையைச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது... அவள் திடீரென்று அவனது மடியில் குப்புறவீழ்ந்து தன் முகத்தை அவனது மடியில் புதைத்தாள். அவன் அவளது தலைமுடியை வருடி அவளைத் தேற்றினான்.

அவர்களால் இந்தக் கொடுமைகளைத் தாங்கமுடியாது என்பதைப் புரிந்துகொண்டு பேச்சை வேறுபக்கம் திருப்பினேன். அவர்களுடைய கதையைக் கேட்டேன். அப்பொழுதுதான் அவர்கள் ஜிப்ஸி இனத்தவரின் சோகக் கதைகளைக் கூறினார்கள்.

அவன் தனது 'கிற்றாரை' எடுத்தான். அவள் தன் அழகிய குரலில் மெதுவாக...

"வானம் விரிந்திருக்கிறது...

பூமியும் அதுபோல...

பறவைகள் பாடுகின்றன...

இலைகள் அசைகின்றன...

மனிதர்கள் மட்டும்..லா..லா..லா..."என்று பாடினாள். எனக்கு ஏனோ கண்ணீர் வந்தது....

(மீண்டும் அடுத்த வாரம்)

# டோக்கியோவில் உறுதியளிக்கப்பட்ட நிதியுதவி இலங்கையைத் துண்டாடுவதற்கான திட்டம்

## -ஜே.வி.பி.யின். பிரச்சார செயலாளர் கூறுகிறார்

டோக்கியோ மாநாட்டில் இணக்கம் காணப்பட்ட 4.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியுதவி இலங்கையை துண்டாடுவதற்கான திட்டமென ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

எனவே பணத்துக்காக நாட்டைக் காட்டிக்கொடுப்பதா? அல்லது தேசிய பொருளாதாரத்தை வளர்ப்பதா? என்பதை பொது மக்கள் தீர்மானித்துக் கொள்ள வேண்டுமெனவும் வெயாங்கொடவில் இடம்பெற்ற தேசப் பற்றுள்ள தேசிய இயக்கத்தின் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். இலங்கையைத் துண்டாடும் இடைக்கால நிர்வாக சபை யோசனையை ஏற்றுக் கொள்ளுமாறு ஐக்கிய தேசியக் கட்சி, சர்வதேசம், தமிழீழ விடுதலைப் புலிகள் எனப் பலர் அரசாங்கத்தை வலியுறுத்தி வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளாார். சுமார் 25 வருடங்களாக வெளிநாடுகளின் தாளத்துக்கு ஆடுகின்ற ஒரு நாடாகவே சிறிலங்கா விளங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இடைக்கால நிர்வாகசபை அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றால் அரசாங்கத்தில் இருந்து ஜே.வி.பி. விலகிச்செல்லும் என்பதை நன்கு அறிந்து கொண்டே, இடைக்கால நிர்வாக சபை அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு தயாரா? என அறிவிக்குமாறு அரசாங்கத்திடம் ஐக்கிய தேசியக் கட்சி சவால் விட்டு வருவதாகவும் விமல் வீரவன்ச குறிப்பிட்டுள்ளார். அத்துடன், கூட்டமைப்பிலிருந்து ஜே.வி.பி.யை விலகவைத்து அதன் மூலம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஒரு முயற்சியாகவே ஐக்கிய தேசியக் கட்சி இத்தகைய சவால்களை விடுத்து வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# தீவிரமான விடயங்கள் குறித்து புலிகளுடன் பேச மாட்டேன்

## மல்வத்த பீடாதிபதி கூறுகிறார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சந்திப்பின் போது தான் எவ்வித தீவிரமான விடயங்கள் குறித்தும் வாதாடப் போவதில்லை என கண்டி மல்வத்த பீடாதிபதி சிறிசுமங்கள மகாநாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் இடம்பெறவுள்ள சந்திப்புக்களின் போது, கலந்துரையாடப்படவுள்ள விடயங்கள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இதுகுறித்து தெரிவித்துள்ளார். தாம் ஒரு பொதுவுடமைவாதியோ அல்லது மதவாதியோ அல்லவென குறிப்பிட்டுள்ள மல்வத்த பீடாதிபதி, தனது கொள்கைகள் யாவும் பௌத்த தர்மத்தை அடிப்படையாகக் கொண்டதே எனவும் தெரிவித்துள்ளார். அத்துடன், விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை என்ன அடிப்படையில் மேற்கொள்வதென்பது தொடர்பாக பௌத்த சங்க சபையுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான விடயங்கள் ஆராயப்படும் போது தீவிரவாதப் போக்குகளை உதறித்தள்ள வேண்டியது அவசியமெனவும் குறிப்பிட்ட மல்வத்த மகாநாயக்க தேரர், இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் ஜே.வி.பி.யும் தமிழீழ விடுதலைப் புலிகளும் விட்டுக் கொடுப்புடன் செயற்பட வேண்டியது அவசியமெனவும் கூறியுள்ளார்.

# அரசு தனது பெரும்பான்மையை இவ்வாரம் நிரூபிக்கும்

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

அரசாங்கம் இவ்வாரத்தினுள் தனது பெரும்பான்மையைப் பாராளுமன்றத்தில் நிரூபிக்கவுள்ளதாக மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி தனது எட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுடன் இன்று சேரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் சனாதிபதியுடன் செய்யப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் தொண்டமானுக்கு இரண்டு அமைச்சுப் பதவிகள் கொடுக்கப்படவுள்ளன.

தோட்ட உள்கட்டமைப்பு அமைச்சு, நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் இரண்டு பிரதி அமைச்சுப் பதவிகளை வழங்குவதன் மூலம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு முழுமையான ஆதரவு வழங்குமென எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் மேலும் கூறினார். (32)

# அவசரகாலச் சட்டத்தை மீளப்பிறப்பித்து நாட்டின் குழப்ப நிலையைச் சீர்செய்க

## -ஹெல உறுமய வலியுறுத்து

(கொழும்பு)

ஜாதிஹ ஹெல உறுமயவின் தலைவர் வண.எல்லாவெல மேதானந்த தேரர் விடுத்துள்ள அறிக்கையில், நாட்டில் மிகவும் குழப்பமான ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளதாக அரசைக் கடிந்துள்ளதுடன், உடனடியாக அவசர காலச சட்டத்தை மீளவும் பிறப்பித்து நிலைமையைச் சீராக்க முயற்சிக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியும், வன்முறைகளும் நாட்டில் மிகவும் மோசமாக உயர்ந்துள்ளதால், தொடர்ந்தும் பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றும் ஆளும் அரசு, அதைக் கைவிட்டு, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். பொருளாதாரம் சீர்செய்யப்பட்டு, நாட்டின் இனப்பிரச்சினைக்கு விடுதலைப் புலிகளுக்கு அதிக விட்டுக்கொடுப்பற்ற தீர்விற்கான முயற்சியெடுக்கும் என்ற நம்பிக்கையில் மட்டுமே சிங்கள மக்கள் ஐ.ம.சு.மு.க்கு வாக்களித்தார்கள் என்றும், அதை இந்த அரசு ஏமாற்றிவிட்டதாகவும் அவர் மேலும் குற்றம் சாட்டியுள்ளார். இதற்கிடையில், மல்வத்தை பீடாதிபதியான அதிவண.திபொத்துவேவ சித்தார்த்த ஶ்ரீ சுமங்கல தேரோவுக்கு, ஹெல உறுமயவின் பிரதித் தலைவர் வண. ஒமல்பே சோபித தேரோ எழுதியுள்ள கடிதத்தில், விடுதலைப் புலிகளுடன் சந்திப்பை நடாத்துவதான அவரது முடிவை மீள்பரிசீலனை செய்யும்படி கோரிக்கை விடுத்துள்ளார்.

# வாழ்த்துச் செய்தி

உலக வங்கியின் நிதியுதவியுடன்
விவசாயப் பெருமக்களின்வாழ்வியலை
மேம்படுத்தும் நோக்கில், பாரிய வேலைத்திட்டங்களை
மேற்கொண்டு வரும் நியாப் நிறுவனமானது;

தமிழீழத்தில் கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கும்
மேலாகப் பாரிய இன்னல்கள், இடையூறுகளின் மத்தியிலும்
தமது அர்ப்பணிப்புடனான அயராத உழைப்பின் மூலம்

- **இன்னலுற்ற தமிழ் மக்களைப் பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்றியது மட்டுமல்லாது**
- **தொடர்ச்சியாக நான்கு மாதங்கள் தென்னிலங்கையிலிருந்து உலர் உணவுத் தொடரணிகளின் வருகை முற்றாகத் தடைசெய்யப்பட்ட நிலையிலும்,**

அரிசியின் விலையினைக் கிலோ ரூபா 18.00 இற்கு மேல்
செல்லவிடாது எமது தேசத்தையும், மக்களையும்
கண்ணின் இமைபோலக் காத்த எமது விவசாயிகளின்
விவசாயம் சார் செயற்பாடுகள்
நவீனமயப்படுத்தப்பட வேண்டும்
என்ற ஒரே ஆதங்கத்தில் நவீன தொழில்நுட்ப உத்திகளை
இனங்காட்டும் இந்த மாபெரும்
**விவசாயக் கண்காட்சியினை** நடாத்தும்
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு
நிறுவனத்தையும், அத்துடனிணைந்து அயராது
உழைக்கும் மாவட்டத் திணைக்களங்களையும்
எல்லாவற்றுக்கும் மேலாக தமிழீழ விவசாயப் பெருமக்களையும்
பெருமகிழ்வுடன் போற்றுகின்றோம்.

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்டச் செயலகத்துடன் இணைந்து**
**'நியாப்' நிறுவனம்–முல்லை மாவட்டம்.**

(5029)

23
வவுனியா- சிதம்பரபுரம் காட்டுப் பகுதியில் இரண்டு மனித எலும்புக் கூட்டுப் பாகங்கள் பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டன.

*இராணுவத்திற்குத் தகவல்களை வழங்கி வந்தவர் கொழும்பில் சுட்டுக்கொலை.

*காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லப்பிள்ளைகள் நடாத்தும் கல்விக் கண்காட்சி ஆரம்பம்.


கல்விக் கண்காட்சி

*மட்டக்களப்பில் அண்மையில் நடந்த சம்பவங்கள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை எவ்விதத்திலும் பாதிக்காதென ஜப்பானியத்தூதுவர் அக்கியோசூடா தெரிவித்தார்.

* இராணுவத்தினர் மீது க்குதல் நடத்தப்பட்டால் திருப்பித் தாக்குமாறு இராணுவத்தளபதி சாந்தகொட்டேகொட தெரிவிப்பு.

24
அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் சச்சி மாஸ்ரரின் சகா சுட்டுக்கொலை.

* அமைதி வழிமுறையை முன்னெடுத்துச் செல்ல கிழக்கின் நிலைமைகள் சாதகமாக இல்லையென கண்காணிப்புக் குழுவின் அதிகாரி ஜோன்ஒஸ்கார் சோன்ஸ் தெரிவிப்பு.

* சிறிலங்காப்படையினரால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்புச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் 10 பேர் சிறைச்சாலையின் கூரைமீதேறிப் போராட்டம் நடத்தினர்.

* நியாப் அமைப்பின் பணிப்பாளர் சிகால்பெர்னாண்டோ யாழ்ப்பாணத்திற்கு விஜயம்.

* யாழ். தீவகப்பகுதியில் படையினரால் கொல்லப்பட்ட பொது மக்கள் நினைவாக நினைவுத்தூபி திறந்து வைக்கப்பட்டது.

* முஸ்லிம் காங்கிரசிலிருந்து ரிஷாத், மஜீத், பைலா ஆகிய மூவரையும் நீக்கியது தவறானதென உயர்நீதிமன்றம் தெரிவிப்பு.

25
*தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரொன்புறூவ் ஹொவ்டே சந்தி த்தார்.


கண்காணிப்புக் குழு சந்திப்பு

* அரசியல்துறைப் பொறுப்பாளருடனான சந்திப்பின் போது கிழக்கில் நடைபெற்ற கொலைகள் தொடர்பாக ஆராயப்பட்டதென கண்காணிப்புக் குழுவின் தலைவர் தெரிவிப்பு.

* யாழ்பாணத்திற்கு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராலயத்தின் பொறுப்பதிகாரி ஜேம்ஸ் எஸ்ட்வில்ஸ் விஜயம்.

* யாழ்ப்பாணத்திற்கு நோர்வேத் தூதரக அதிகாரிகள் விஜயம்.

* நீர்கொழும்பில் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொலை.

*வன்னிமண்ணின் இறுதி மன்னன் மாவீரன் பண்டாரவன்னியனின் நினைவுநாள் கற்சிலைமடுவில் கொண்டாடப்பட்டது.


கற்சிலை மடுவில் நினைவு நிகழ்வு

* தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைய வந்த இரண்டு சிறுவர்களை வவுனியா மாவட்ட அரசியல்துறையினர் அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.

26
* பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குப் பேச்சுவார்த்தை மூலம் தான் நிரந்தரத் தீர்வை எட்டமுடியுமென யாழ். குடாநாட்டிற்கான இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர்ஜெனரல் சுனில் தென்னக் கோன் தெரிவிப்பு.

*இலங்கையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் மத்தியஸ்த நிலையில் தளம்பல் ஏற்பட்டுள்ளதா? என்ற கேள்வி அரசாங்கத்திடம் எழுந்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் மங்களசமரவீர தெரிவிப்பு.

* மட்டக்களப்பு மாவடிஓடைப்பகுதியில் தேசவிரோதக் குழுவினரின் தாக்குதலில் போராளி ஒருவர் வீரச்சாவு.

*லண்டனில் இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை.


27
* தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனை சமஷ்டி அமைப்பின் தலைவரும் முன்னாள் ஒன்ராரியோ முதல்வருமான பொப்ரோ சந்தித்துத் தற்போதைய சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டிருப்பது குறித்து ஆராய்ந்தார்.

*வட-கிழக்கு மனித உரிமை செயலகத் தலைவரை கனேடியக் குழுவினர் சந்தித்தனர்.


கனேடியக் குழுவுடன் சந்திப்பு




*லெப்.கேணல் ராஜனின் 12 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு யாழ்.மாதகலிலும், கிளிநொச்சியிலும் சிறப்பாக இடம் பெற்றது.


12 ஆம் ஆண்டு நினைவாக...

*. யாழ். வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வர்த்தகக் கண் காட்சி ஆரம்பமானது.

*. திருகோணமலையில் புலிகளால் பிடிக்கப்பட்ட ஊர்காவல் படையினரை உறவினர் பார்வையிட்டனர்.

*. விடுதலைப்புலிகளுக்கோ அல்லது வேறு ஆயுதம் தாங்கிய குழுக்களுக்கோ நோர்வே அரசாங்கம் ஒரு போதும் இராணுவப் பயிற்சியை அளிக்கவில்லையென கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டது.

28.
இராணுவத்திற்குத் தகவல் கொடுத்து வந்த திஸ்ஸவீரசிங்கம் துஷ்யந்தகுமார் என்ற இளைஞன் கொழும்பில் சுட்டுக் கொலை

*. வவுனியா ஓமந்தைப் பகுதியில் இடம் பெற்ற வீதிவிபத்தில் ஒருவர் பலி.

*. போராளியும் இலக்கியப் படைப்பாளியுமான தமிழ்க்கவியின் "இருள் இனி விலகும்" எனும் போரியலை சித்திரிக்கும் இலக்கிய நாவல் வெளியிடப்பட்டது.


இலக்கிய நாவல் வெளியீட்டில்

29.
*நோர்வே தமிழ்ச்சங்க வெள்ளி விழா நிகழ்வு சிறப்புற ஆரம்பம்.


தமிழ்ச்சங்க வெள்ளி விழா

*. மனித உரிமைகள் மீறப்படுமானால் அதனைக் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுப்போம் என யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தெரிவிப்பு.

## இந்திய வம்சாவளியினருக்கு பிரஜாவுரிமை வழங்க மன்னாரில் நடமாடும் சேவை

வடக்கு கிழக்கில் வாழும் இந்தியவம்சாவளி தமிழர்களின் பிரஜாவுரிமைப் பதிவு விடயமான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் தொழில் நுட்பப் பூங்கா கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலை ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் மன்னார்க் கிளை ஒழுங்கமைப்புச் செய்திருந்தது. இக்கலந்துரையாடல் மன்னார் அரசாங்க அதிபரின் ஆலோசனையுடன் மேலதிக அரசாங்க அதிபர் நீக்கிலாப்பிள்ளை தலைமையில் ஐ.நா.அ.உயர்ஸ்தானிகராலயம் மன்னார்க் கிளை வெளிக்கள அலுவலகத்தின் அனுசரணையுடன் நடைபெற்றது.இக்கருத்தரங்கிற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினருமான யோகராஜன் ஐ.நா.அ. உயர்ஸ்தானிகராலயம் கொழும்பு கிளை அலுவலகர் செல்வி.கதிஜ்ஜாவும் கலந்துகொண்டு மேலதிக விளக்கம் அளித்தனர்.

இக்கருத்தரங்கில் ஐ.நா.அ. உயர்ஸ்தானிகராலயம் மன்னார்க்கிளை அலுவலர்கள், மன்னார் மேலதிக அரச அதிபர், மன்னார் பிரதேச செயலாளர், மாவட்டப் பதிவாளர், தேர்தல் திணைக்களம் மற்றும் இருபதிற்கும் மேற்பட்ட கிராம அலுவலர்கள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மன்னார் பொறுப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வோடு ஒட்டிய நடமாடும் சேவை மாவட்டத்தின் சகல பிரிவுகளிலும் எதிர்வரும் செப்ரெம்பர் 13ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் இக்கருத்தரங்கில் முடிவு செய்யப்பட்டது. இந்நடமாடும் சேவையின் போது பிரஜாவுரிமையற்ற இந்திய வம்சாவழித் தமிழர்கள் தங்கள் பதிவுகளைப் பதிவு செய்து பயன்பெறவேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது. எனவே நடமாடும் சேவை நடைபெறும் காலப்பகுதியில் பிரஜாவுரிமை சம்பந்தமான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றவர்கள் உரிய அதிகாரிகளைச் சந்திக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். (மி)

## வீட்டு மின்னிணைப்பு கற்கைநெறி விரைவில் ஆரம்பமாகும்

தேசிய கைத்தொழில் அதிகார சபையால் வீட்டுமின் இணைப்பு கற்கை நெறியொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. தேசிய கைத்தொழில் அதிகாரசபையால் கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவன பளைப் பிராந்திய நிலையத்தில் வீட்டு மின்னிணைப்பு கற்கைநெறி 01.10.2004 அன்று ஆரமபிக்கப்படவுள்ளதால் 25.09.2004. இற்கு முன்னர் 18 தொடக்கம் 30 வயதுவரையான ஆண், பெண் இருபாலாரும் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம் எனவும் இக்கற்கை நெறியிற்கு மாதாந்த ஊக்கு விப்புக் கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பபபடிவங்களை பதிவாளர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை- பளை எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்புமாறு தொழிற்பயிற்சி விரிவுரையாளர் சபேசன் கேட்டுக்கொள்கின்றார். (15)

### குளத்தில் நீரில்லை

(கிளிநொச்சி)

தற்போது ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக கிளிநொச்சிக் குளத் தின் நீர் முற்றுமுழுதாக வற்றியுள் ளது. இதனால் நன்னீர் மீனினங் கள் பெருமளவில் அழிவடைந் துள்ளதுடன் பரவிப்பாஞ்சான், இரத்தினபுரம், திருவையாறுப் பகுதி களின் கிணறுகளின் நீர்மட்டமும் வெகுவாகக் குறைவடைந்துள்ளதுடன் சில இடங்களில் முற்றுமுழு தாக வற்றியுமுள்ளது. இதனால குடி நீருக்காக மக்கள் வேறிடங் களிற்கு செல்வதையும் காணக் கூடியதாகவுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச உதவி அரசாங்க அதிபராக

சிறப்புறப் பணியாற்றி 01-09-2004 இல் ஓய்வு பெற்ற

# உயர்திரு செல்லையா காசிப்பிள்ளை அவர்களின் சேவை நலன் பாராட்டுச் சிறப்பிதழ்



கரைதுறைப்பற்று பிரதேச உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றி 01-09-2004 இல் ஓய்வு பெறும் உயர் திரு. செ. காசிப்பிள்ளை அவர்கள் தனது கல்வியைப் புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலையில் பயின்று 01-08-1971இல் பொது எழுது வினைஞர் சேவையில் புகுந்து நாட்டின் பல பகுதிகளிலும் சேவையாற்றிப்படிப்படியாகத் தனது திறமையால் உயர்ந்து பிரதம லிகிதராகவும், பின்னர் 01.01.2000இல் உதவி அரச அதிபராகவும் உயர்வு பெற்றார்.

உண்மையான சேவையாளன் மக்களைத் தேடிச்செல்லவேண்டும். என்ற கோட்பாட்டைத் தனது வாழ்வில் மிகநேர்த்தியாகக் கடைப்பிடித்த காசிப்பிள்ளை ஐயா அவர்கள் தனது பதவிக்குரிய எந்தவித அதிகாரத் தோரணையும்இல்லாமல் மக்களோடு மக்களாகப் பழகி எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்காக அரும்பாடுபட்டவர்.

**"பணியுமாம் என்றும் பெருமை - சிறுமை.**
**அணியுமாம் தன்னை வியந்து"**

என்ற வள்ளுவனின் வாக்குக்கு அமைய தனது பணியில் ஈடுபடும்போது மிகவும் எளிமையாக பழகக்கூடிய நிலையில் இருந்தவர்.

வீதியில்கூட எங்கள் காசிப்பிள்ளை ஐயாவை எவரும் அணுகி எந்த விடயத்தையும் கதைக்கலாம், கையெழுத்து வாங்கலாம். அந்தளவுக்கு மக்கள் சேவையே மகேசன்சேவை என்று கருதிய செம்மல் இவர்.

சரியான முகாமையாளன் எப்பொழுதும் விளைதிறன்பற்றி மிகக் கவனமாக இருப்பான். என்பதற்கிணங்க காசிப்பிள்ளை ஐயாவும் செயல்களின் இறுதி விளைவு பற்றி மிக விழிப்பாக இருந்தவர். அதனால் பல சமயங்களில் அவமானங்களையும் துச்சமென மதித்து அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்தவர் என்பது அவரோடு பழகிய அனைவருக்கும் நன்கு தெரியும்.

ஒருஏழைமூதாட்டிக்கு 'பிச்சைச்சம்பளம்' எனப்படும் உபகாரப்பணம் கிடைக்காவிட்டாலும் அதற்காகக் கண்கலங்கியவர் தன்னால் எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு ஏழைகளின் உயர்வுக்காக உழைத்த பெருமகன் இவர்.

காசிப்பிள்ளை ஐயாவின் வீடு ஒரு"உபஅலுவலகம் " போல் இயங்கிக்கொண்டிருக்கும். எந்த நேரத்திலும் எவரும் அவரை அணுகலாம். எந்த நேரத்தில் தேடிச்சென்றாலும் "சினந்தொரு வார்த்தை" பேசாதபண்பாளன் இவர்.

"முற்றத்து ரோஜா மணப்பதில்லை" என்பதுபோல் காட்சிக்கெளியனாய் கடுஞ்சொல் இல்லானாய் இருந்த காசிப்பிள்ளை ஐயாவின் அருமை சிலருக்குப் புரியாமல் இருக்கலாம். எனினும் எமது பிரதேசத்தின் ஒவ்வொரு தெருவும், குளமும், பொதுக்கட்டடமும், ஏழைகள் மனமும் அவரின் பணியை வாழ்த்திக் கொண்டேயிருக்கும்.

**"வன்னியின் வளங்களில் ஒன்றே-சேவையை**
**வாரி வழங்கிய எங்கள் நாயகனே**
**சேவையின் இலக்கணத்தை உரைத்தவனே**
**ஓய்விலும் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்"**

## தங்கள் சேவையில் மகிழும்

1. முள்ளியவளை மேற்கு மாதர் அபிவிருத்திச்சங்கம்
2. முள்ளியவளை மேற்கு கிராம முன்னேற்றச்சங்கம்
3. முள்ளியவளை வளர்மதி மன்றம்
4. முள்ளியவளை மேற்கு கமக்கார அமைப்பு

## நலன்விரும்பிகள்

(9187)

| | | |
|---|---|---|
| 1. திரு ந. வன்னியராசா | 5. திரு பி.சிவகணேசன் | 9. திரு. செ.நித்தியானந்தராசா |
| 2. திரு ந. சுந்தரமூர்த்தி | 6. திரு சு. சிவஞானம் | 10.திரு. ம.கமலகாந்தன் |
| 3. திரு க.பரமேஸ்வரன் | 7. திரு ச.செல்வரத்தினம் | 11.திரு க.ஜெயவீரசிங்கம் |
| 4. திரு ந.சிறீஸ்கந்தராசா | 8. திரு க.செல்வானந்தம் | 12.திரு.வி.ஸ்ரீதரன். |

# சேது சமுத்திரத்திட்ட ஆய்வுப்பணிக்கு அமைச்சர் டி.ஆர்.பாலு தமிழகம் வருகிறார்

தூத்துக்குடி சேது சமுத்திரத் திட்ட ஆய்வுப்பணிகளுக்காக செப்.3 இல் மத்திய அமைச்சர் டி.ஆர். பாலு மதுரை வருகிறார்.

இது குறித்துத் தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக்கழக சேர்மன ரகுபதி தெரிவித்துள்ளதாவது;

மத்திய கப்பல் போக்குவரத் துத்துறை அமைச்சர் டி.ஆர்.பாலு சேது சமுத்திரத்திட்ட ஆய்வுப் பணிகளுக்காக செப்3இல் மதுரை வருகிறார். காலை11 மணிக்கு தென் கிழக்குக் கடற்கரையோர தென்பாக மீனவ குழுக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் பிரதிநிதிகளோடு திருச்செந்தூரி விருந்து கன்னியாகுமரி செல்லும் சாலையோர மேம்பாடு குறித்தும் துறைமுகத்திற்கு வரும் கப்பல் களால் மீனவப்படகுகள் மற்றும் மீன்பிடி வலைகளில் ஏற்படும் சேதங் களைத் தவிர்ப்பது குறித்தும் பேச்சு வார்த்தை நடத்துவார். தூத்துக் குடி, சென்னை, எண்ணூர், விசாகப் பட்டணம், பாரதீப் துறைமுகங்க ளின் சேர்மன்களோடு சேது சமுத் திர திட்டத்திற்காக தனி நிறுவனம் அமைப்பது குறித்து ஆலோசனை நடத்துவார். மறுநாள் காலை சேது சமுத்திரதிட்ட கால்வாய் அமையவுள்ள இராமேஸ்வரத்திற் கருகிலுள்ள ஆதாம பாலப்பகுதி யையும், தனுஷ்கோடியில் புனரமைப்பு செய்யப்படவுள்ள 750 ஹெக்ரேயர் தாழ்ந்த நிலப் பகுதிகளையும் பார்வை யிட்டு சேதுசமுததிர திட்டம் குறித்து ஆலோசனை நடத்துவார்.

# இந்தியா பாகிஸ்தான் இடையே பேச்சு விரைவில் தொடங்கும்

## - பாக்.பிரதமர் அறிவிப்பு

இந்தியா பாகிஸ்தானிடையே கூட்டுப்பேச்சுவார்த்தை விரைவில் தொடரவிருக்கிறது என பாகிஸ்தான் பிரதமர் சவுகத் ஆசிஸ் தெரிவித்துள்ளார்.

இருதரப்பிற்கிடையேயான முக்கியமான பிரச்சினைகள் ஆலோசிக்கப்படும் என்றும் குறிப் பாக ஜம்மு-காஷ்மீர் பிரச்சினைக ளுக்குத் தீர்வு காண்பது குறித்து அதிக கவனம் செலுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.


# தமிழீழ போக்குவரவுக்கழகம்

## நடத்துநர் பணிக்கான நேர்முகத் தேர்வு

**சம்பளத்திட்டம்:~**

$\frac{4430-5530}{10x110}$ +2000.00 =6430.00 +சிறப்புக் கொடுப்பனவு 3000.00= 9430.00

மேற்படி சம்பளத்திட்டத்தில் நடத்துநர் பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர்முகத்தேர்வு 05.09.2004 ஆம் நாள் ஞாயிறு காலை 09.00 மணி தொடக்கம் மாலை 04.00 மணி வரை விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகில் உள்ள பணிமனையில் நடைபெறும்.

மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர் கல்வித்தகைமை, அகவை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகிறோம்.

குறிப்பு:- *இப்பணிக்கு இணைய விரும்புவோர் இந்நாளில் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழ போக்குவரவுக்கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-10206)


# பல்கலை கல்விசாரா ஊழியர்கள் பணிப்புறக்கணிப்புக்குத் திட்டம்

(கொழும்பு)

நாட்டின் அனைத்து பல்கலைக கழக கல்விசாரா ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டம் ஒன்று குறித்து எச்சரிக்கை விடுத் துள்ளனர். தமது கொடுப்பனவு நிலுவை தொடர்பில் 'சிலிடா' அமைப்பு வெளியிட்டுள்ள பரிந்து ரைகளை ஆட்சேபித்தே இந்தப் பணிப்புறக்கணிப்பு மேற்கொள் ளப்படவுள்ளது.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் நிலுவைக் கொடுப பனவுகள் சம்பந்தமாக பல வரு டங்களாக பிரச்சினை நிலவி வந் தது. இதனையடுத்து அரசாங்க ஊழியர்களின் சம்பள பிரச்சி னைகளை கையாளும் சிலிடா அமைப்பு பரிந்துரைகளை சமர்ப் பித்திருந்தது.அந்த அமைப்பு ஆரம் பத்தில் சமர்ப்பித்திருந்த பரிந்து ரைக்கும், தற்சமயம் இறுதிப்படுத் தப்பட்டுள்ள பரிந்துரைக்கும் இடை யில் ஆட்குறைப்பு விடயத்தில் வேறுபாடுகள் இருப்பதாக பல்க லைக்கழக ஊழியர் சங்கம் கூறு கிறதுஎனவே அதனை மாற்றி யமைக்கவேண்டுமென கோரும் அந்தச் சங்கம், தமது நிலுவைக் கொடுப்பனவுகள் இந்த மாத இறு திக்குள் வழங்கப்படவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத் துள்ளது. இல்லையேல் இன்று முதல் தாம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக பல்கலைக்கழக ஊழியர்சங்கம்எச்சரித்துள்ளது.(32)

# வில்பத்துப் பகுதியில் புலிகளின் பயிற்சி முகாமாம்

## - சிறிலங்கா புலனாய்வுத்துறை கூறுகிறது

வில்பத்துப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் புதிய இரண்டு முகாம்களை அமைத்துள்ளதாக சிறிலங்கா பொலிஸ் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

புத்தளம் மற்றும் மன்னார் பிரதேசங்களில் எல்லைகளை கொண்ட இடங்களில் இந்த முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா பொலிஸ் புலனாய்வுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது

இந்த முகாம்களுக்கும், மன்னார் கடற்பகுதியில் அமைந்துள்ள குதிரை மலை முகாம்களுக்கும் இடையில் தொடர்புகள் இருப்பதாக இவர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

வில்பத்து பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புதிய முகாம்களில் பெருமளவு பெண் போராளிகள் பயற்சி பெறுவதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

இந்த நிலையில் வன பரிபாலன சபையினரின் தகவல்படி, வில்பத்துவில் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளமை உண்மையான விடயமாக இருக்கின்ற போதும், அது சுற்றுலாத்துறையினர் செல்லும் இடங்களில் அமைக்கப்பட்டிருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)


*கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச்சபை*



## கணனிப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்

பயிற்சி நெறி – எம்.எஸ்.ஒப்பீஸ் (M.S.OFFICE)
காலம் –6 மாதம்
கல்வித் தகைமை – க.பொ.த.(சா/த)சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
பயிற்சிக்கட்டணம் – 4000/=
பயிற்சி ஆரம்பத்தில் 1000/= செலுத்துதல் வேண்டும். மிகுதி தவணை முறையில் செலுத்த முடியும்.

விண்ணப்ப முடிவுத் திகதி – 14 – 09 – 2004

சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தைத் தயாரித்து 14.09-2004ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், மாவட்ட கூட்டுறவுச்சபை, பரவிப் பாஞ்சான், கிளிநொச்சி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.



*செயலாளர்,*
*மாவட்ட கூட்டுறவு சபை,*
*கிளிநொச்சி.*

(சி-10208)



**விவசாயக் கண்காட்சி.** வட்டக்கச்சி பண்ணை, கிளிநொச்சி.
1-9-2004 முதல் 5-9-2004 வரை



# அல்ஜிபோல்

## (ஜேர்மன் ஓர்க்கனிக்)

## ALGIFOL™

German Organics

அமெரிக்கா. ஜப்பான்,
இந்தியா போன்ற நாடுகளில்
அங்கீகரிக்கப்பட்டதும்
உலக பிரசித்தி பெற்ற
நிபுணர்களால் ஜேர்மனியில்
உற்பத்தி செய்யப்பட்டதும்
நச்சுத்தன்மையற்றதுமான
Algifol LIQUID
100%
ஆழ்கடல் தாவரங்களினால்
உற்பத்தி செய்யப்பட்ட
இயற்கையான திரவப்பசளை.




இறக்குமதியாளர்கள்

BCPE CO (PVT) LTD பிரிட்டிஷ் சிலோன் லிமிட்டெட்.

35-1/1, தேவநம்பியதிஸ்ஸ மாவத்தை, கொழும்பு 10.

தொலைபேசி : 011-4717360, 4717361
பெக்ஸ் : 011-2693206
ஈமெயில் : teacom@slt.lk / teacom@dynaweb.lk

(சி-10205)

# 5 ஆவது ஒருநாள் போட்டியிலும் தென்னாபிரிக்க அணிக்கு தோல்வி




## தொடரின் நாயகன் சங்கக்கார



சிறிலங்கா அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்கும் இடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டித்தொடரின் ஐந்தாவதும், இறுதியுமான போட்டியிலும் சிறிலங்கா அணி 49 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சூழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் சிறிலங்கா அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார்.

இதன்படி துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 8 விக்கெட்டுக்களை இழந்து, 308 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சனத்ஜெயசூரிய 79 ஓட்டங்களையும், சங்கக்கார 72 ஓட்டங்களையும், சமன்ஜெயந்த 51 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்கு கடினமான வெற்றி இலக்கை நோக்கி ஆட்டத்தை ஆரம்பித்த தென்னாபிரிக்கா சொற்ப ஓட்டங்களுக்கு கிப்ஸ், ஸ்சிமித் ஆகியோரின் விக்கெட்டுக்களை இழந்து இக்கட்டான நிலையில் இருந்தது.

அடுத்துக்களமிறங்கிய இளம் வீரர் ருடெல்பும் சகலதுறைவீரர் ஜக்கலிசும் இணைந்து சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கிய போதும் ஏனைய வீரர்கள் சுலபமாக சிறிலங்கா பந்து வீச்சாளர்களுக்கு விக்கெட்டுக்களை பறிகொடுத்ததால் அவ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 259 ஓட்டங்களை மாத்திரமே பெறமுடிந்தது.

துடுப்பாட்டத்தில் ஜக்கலிஸ் 101 ஓட்டங்களையும், ருடெல்வ் 48 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் உபுல்சந்தன 61 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும், சனத் ஜெயசூரிய 48 ஓடடங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக உபுல் சந்தனவும், போட்டித்தொடரின் தொடர் நாயகனாக சங்கக்காரவும் தெரிவாகினர்.

## ஹெய்டனின் கருத்துக்கு முன்னாள் தலைவர் கண்டனம்

சிறிலங்கா கிரிக்கெட் வீரர்கள் சுயகௌரவத்துக்காகவும், சாதனைக்காகவும் மட்டுமே கிரிக்கெட் விளையாடுகின்றார்கள் என அவுஸ்திரேலிய வீரர் மத்யூ கெய்டன் கூறிய கருத்துக்கு சிறிலங்காவின் முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவர் அருச்சுன ரணதுங்க கண்டனம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் உபகண்டத்தில் சிறிலங்கா வீரர்களின் வளர்ச்சியை அவுஸ்திரேலிய வீரர்கள் சகிக்க முடியாதிருப்பதாகவும் கூறியுள்ளார். இந்தியாவின் PTI செய்தி நிறு வனத்துக்கு அவர் வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக இவ்வாறான விமர்சனங்கள் வெளிவந்த வண்ணம் இருப்பதாகவும், ஏனைய நாட்டு வீரர்களும் பந்து வீச்சிலும், துடுப்பாட்டத்திலும் திறமையை வெளிக்காட்ட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

## மிகச் சிறப்பாக இடம்பெற்ற ஒலிம்பிக் சர்வதேச ஊடகங்கள் புகழாரம்

எதென்ஸ் 2004 ஒலிம்பிக் போட்டி ஆரம்பம் முதல் இறுதிவரை மிகச்சிறப்பாக இடம் பெற்றதாக சர்வதேச ஊடகங்கள் புகழாரம் சூடியுள்ளன.

202 நாடுகள் பதினோராயிரத்துக்கும் மேற்பட்ட வீரவீராங்கனைகள் ஒன்பதாயிரத்துக்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்கள் கூடிய இந்த நிகழ்வை இருவாரகாலத்துக்கு மிகச்சிறப்பாக கிரீஸ் ஒலிம்பிக்சபை நடத்தியிருக்கிறது.

இது விளையாட்டுத்துறைக்கு கிடைத்த மாபெரும் வெற்றி எனத் தெரிவித்திருந்தன.

இதைவிட பயங்கரவாத தாக்குதல் இடம்பெறுமோ என்ற அச்சம் காரணமாக மிகமிகக் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனால் அச்சப்பட்டது போல் எந்தவிதமான அசம்பாவிதங்களும் இன்றி கண்ணைக்கவரும் வகையிலான மிகச்சிறப்பாக நடந்தேறியுள்ளதாகவும் ஊடகங்கள் பாராட்டியுள்ளன.


அதேவேளை விளையாட்டு விமர்சகர்கள் கருத்துத் தெரிவிக்கையில்; அமெரிக்காவும், ரஷ்யாவும் உலகளாவிய ரீதியாக பல சாதனைகளைச் செய்து பதக்கப்பட்டியல் வரிசையில் முன்னணியில் இருப்பவர்கள்.

ஆனால் எதென்ஸ் ஒலிம்பிக் 2004 போட்டியை பார்த்தால் சீனாவும், ஜப்பனும் அமெரிக்க ரஷ்ய வீரர்களுக்கு பெரும் போட்டியைக் கொடுத்துள்ளன.

1984 ஆம் ஆண்டிலேயே முதன்முதலாக ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொண்ட சீனா இந்த குறுகிய காலத்திலே துரிதமான முன்னேற்றம் கண்டு 32 தங்கப்பதக்கத்தை பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளன.

இது தவிர தென்கொரியா, இந்தோனிசியா, தாய்லாந்து வீரர்கள் கூடப்பதக்கங்களை வென்று ஆசியக்கண்டத்துக்கு ஒரு சிறப்பினை பெற்றுக்கொடுத்துள்ளனர்.

இந்தப்போட்டியில் பெரும் தோல்வியை தழுவிய ஆசிய நாடுகளில் இந்தியா முன்னணியில் இருப்பதாக பலரும் மனம் வருந்திய நிலையில் கருத்து வெளியிட்டுள்ளனர்.



உலகில் நூறுகோடி மக்களைக்கொண்டுள்ள இந்தியா ஒரேயொரு வெள்ளிப்பதக்கத்தைப் பெற்று பதக்கப்பட்டியல் வரிசையில் 66ஆவது இடத்துக்கு பின் தள்ளப்பட்டது.

அதேவேளை இலட்சக் கணக்கான மக்கள் தொகையைக் கொண்ட நாடுகள் மற்றும் எதியோப்பிய போன்றவறிய நாடுகள் பல பதக்கங்களைப் பெற்றுள்ளன.

இதேவேளை, இவ் ஒலிம்பிக் போட்டிகளில் ஊக்கமருந்துகளை வீர வீராங்கனைகள் உட்கொண்டமை தொடர்பாக 24 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

1984ஆம் ஆண்டு அமெரிக்க லொஸ் ஏஞ்சல்சில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் பலர் ஊக்க மருந்துகளை உட்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டி லொஸ் ஏஞ்சல்சை விட இரு மடங்கினால் இம்முறை போதைவஸ்து பாவனை இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இம்முறை கடுமையான சோதனைகள் காரணமாக பிரபலமான விளையாட்டு வீரர்கள் கூட போட்டிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளதுடன் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டு அவை அவர்களிடம் இருந்து பறிக்கப்பட்டிருக்கிறது என்றும் விளையாட்டு விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## பிரேசில் வீரரை தாக்கியவர் கைது



எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியின் கடைசி பந்தயமான 42 கிலோ மீற்றர் தூர மரதன் ஓட்டப் பந்தயத்தில் பிரேசில் வீரர் வான் டெர்லி லிமா முன்னணி வகித்து வந்தார். இந்த நிலையில் திடீரென பார்வையாளர் ஒருவர் பிரேசில் வீரரை தாக்கினார். இதில் நிலைகுலைந்த அவர் சமாளித்து ஓடி வெண்கலப்பதக்கம் வென்றார்.

லிமாவை தாக்கியவரை பொலிசார் கைது செய்தனர். அவர் பெயர் ஹரோன். முன்னாள் பாதிரியாரான அவர் குடி போதையில் இந்த செயலில் ஈடுபட்டதாக தெரிவித்துள்ளார். சிறப்பாக நடந்த இந்த ஒலிம்பிக் போட்டியில் இது ஒரு மோசமான நிகழ்வாக கருதப் படுகிறது.

## அதிரடித் துடுப்பாட்டம் துல்லியமான பந்து வீச்சு கிளிநொச்சி ம.விக்கு வவுனியாவில் சிறப்பு வெற்றி

கடந்த 29ஆம், 30ஆம் திகதிகளில் வவுனியாவில் நடைபெற்ற கடினப்பந்து போட்டிகளில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் 16வயது, 14 வயதுப் பிரிவு அணியினர் கலந்து கொண்டு இரு வேறு போட்டிகளில் விளையாடி சிறப்பான வெற்றிகளைப் பெற்றுள்ளனர்.

29ஆம் திகதி வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்துடன் நடைபெற்ற 16 வயதுப் பிரிவினருக்கான டெஸ்ட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிளிநொச்சி மகாவித்தியாலய அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடினர். அணி தனது முதல் இனிங்சில் 153 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. பதிலுக்கு தனது 1ஆவது இனிங்சில் துடுப்பெடுத்தாடிய வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய அணி தனது அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 113 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

முதல் இனிங்சில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணியின் சார்பாக சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய க. அனுசன் 30 ஓட்டங்களையும், ஆ. அனுசாந் 17 ஓட்டங்களையும் கூடுதலாகப் பெற்றனர். கிளி. ம.வி. சார்பாக சி. ஜெயசீலன் ஆறு விக்கெட்டுக்களையும், க. சஞ்சீவன் இரண்டு விக்கெட்டுகளையும், ஆ. அனுசாந், வா. சஞ்சீவன் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இனிங்சைத் தொடர்ந்த கிளி. ம.வி. அணியினர் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 117 ஓட்டங்களைக் குவித்த தனது ஆட்டத்தை இடை நிறுத்திக் கொண்டது.

கிளி. ம.வி. அணியின் சார்பாக ம. அனட்டிலக்சன் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காமல் 54 ஓட்டங்களையும், வ. அமுதகுமார் 13 ஓட்டங்களையும், ஆ. அனுசாந் 19 ஓட்டங்களையும் பெற்றனர். அணி 154 ஓட்டங்களை வவுனியா த.ம.ம.வி.க்கு நிர்ணயித்தது.

தனது இரண்டாவது இனிங்சை ஆடத் தொடங்கிய வ.த.ம.ம.வி. ஆட்ட நேர முடிவின்போது ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 93 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

கிளி. ம.வி. சார்பாக க. சஞ்சீவன், ம. அனடிலக்சன் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், வா. சஞ்சீவன் ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

புள்ளிகள் அடிப்படையில் கிளி. ம.வி. அணி 12 புள்ளிகளைப் பெற்று வெற்றியை தனதாக்கியது. வ. த.ம.ம.வி. அணி 4 புள்ளிகளை மட்டுமே பெற்றுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து 30ஆம் திகதி வவுனியா விபுலானந்தக் கல்லூரியுடனான 40 ஓவர் கொண்ட போட்டியில் விளையாடிய கிளி. ம.வி. 14 வயதுப் பிரிவினர் முதலில் துடுப்பெடுத்தாடி 136 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 137 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடத் தொடங்கிய விபுலானந்த ம.வி. ம. ஜனகனின் துல்லியமான பந்து வீச்சில் விக்கெட்டுக்களை பறிகொடுத்து 23.3 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 113 ஓட்டங்களை மட்டும் பெற்று விபுலானந்த ம.வி. தோல்வியடைந்தது.

பந்து வீச்சில் ம. ஜனகன் 19 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.



## விளையாட்டு

## இந்தியப் பந்து வீச்சு பயிற்சியாளராக ரீட்

நாட்வெஸ்ட் மற்றும் ஐ.சி.சி சம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டிகளுக்கான இந்திய அணியின் பந்து வீச்சுப் பயிற்சியாளராக அவுஸ்திரேலியாவின் புரூஸ் ரீட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் நிர்வாகம் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் புரூஸ் ரீட்டை நியமிக்க அனுமதி அளித்தது.

முன்னதாக இது குறித்து அணியின் பயிற்சியாளர் ஜோன் ரைட், அணித் தலைவர் கங்குலி ஆகியோரிடம் ஆலோசிக்கப்பட்டதாக இந்தியக் கிரிக்கெட் நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஆண்டு அவுஸ்திரேலியா சென்ற இந்திய அணிக்கு பந்து வீச்சுப் பயிற்சியாளராக புரூஸ் ரீட் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தற்போது இங்கிலாந்து கவுன்டி அணியான ஹாம்ஸ்.'.பைர் அணிக்கு பயிற்சி அளித்து வருகிறார் ரீட்.

## சிந்தனைக்கு



தமிழ் மக்களாகிய நாம் ஒரு தேசியக் கட்டமைப்பைக் கொண்டவர்கள், வரலாற்று ரீதியாக நாம் ஒரு தேசியமாகவே வாழ்ந்து வந்தோம்; தேசியமாகாவே வாழ்ந்து வருகின்றோம் ; தேசியமாகவே வாழப்போகின்றோம்.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 01-09-2004



மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948


# மீண்டும் ஒரு தடவை!

தமிழ் மக்களின் உணர்வுகள் அவர்களின் அரசியல் ரீதியான நிலைப்பாடு என்பன பல்வேறு மட்டத்திலும், மீண்டும் வலியுறுத்தப்படவும் அதற்கான நியாயத்தன்மை குறித்து தெளிவுபடுத்த வேண்டிய அவசியமும் எழுந்துள்ளது. ஏனெனில்,மீண்டும் ஒரு தடவை பரிசீலனை, ஆராய்வு என்ற ரீதியில் தமிழ் மக்களின் உரிமைக்கான கோரிக்கைகளை பின் தள்ளக் கூடிய விதத்தில் சிறிலங்கா ஆட்சியாளர்களும், சிங்களப் பேரினவாத சக்திகளும் தீவிரமாகச் செயற்படத் தொடங்கியுள்ளன.

விடுதலைப்புலிகள் இயக்கம் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு எதிராக இன்று பேரினவாத அரசியல் கட்சி கள், ஆட்சியில் உள்ள ஒரு தரப்பினர், கொழும்பை மையமாகக் கொண்டியங்கும் பேரினவாத ஊடகங்கள் என்பன முனைப்பாகச் செயற்பட்டு வருகின்றன.

இதேவேளை, சிங்கள ஆட்சியாளர்களும்– அதாவது சனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசாங்கமும் அதற்கு ஏற்றவிதத்திலானதொரு நிலைப்பாட்டைக் கொண்டதாகவே உள்ளது. அதாவது சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதில் இழுத்தடிப்புச் செய்து வரும் அரசாங்கம் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக புதிய திட்டவரைவு ஒன்றைத் தயாரித்து வருவதாகவும் பேச்சுவார்த்தைக்கு அடிப்படையாக அதனைக் கொள்ள வேண்டும் என்ற வகையிலான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவும் தொடங்கியுள்ளது.

அத்தோடு தமது நிலைப்பாட்டிற்கு சர்வதேச ரீதியிலான ஆதரவைத் தேடிக்கொள்ளும் முயற்சியிலும் அரசாங்கத்தரப்பு ஈடுபட்டுள்ளது. புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான நகல் திட்டம் பேசப்படும் வேளையில், அரசாங்கத்தின் திட்டம் குறித்தும் பேசப்படுதல் வேண்டும் என்ற ரீதியில் சர்வதேச சமூகத்தை சிறிலங்கா அரசு இராஜதந்திர ரீதியில் அணுகத் தொடங்கியுள்ளது.

ஆகையினால் தமிழ்மக்களும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களும், விடுதலைப்புலிகளும் மீண்டும் தமிழ் மக்களின் கோரிக்கைகளின் நியாயப்பாடு தொடர்பாக வலியுறுத்தவேண்டியதொரு தேவை,/ கட்டாயம் எழுந்துள்ளது. இந்த நிலையில் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப் பினர்கள் தமிழ் மக்களின் நியாபூர்வமான கோரிக்கைகளைச் செயற்பாட்டுக்குழுக்கள் மூலம் பல்வேறு மட்டத்தினருக்கும் கொண்டுசெல்ல மேற்கொண்ட தீர்மானம் வரவேற்கத்தக்கதொன்றே.

தமிழ் மக்களைப் பொறுத்தோ அன்றி விடுதலைப்புலிகளைப் பொறுத்தோ இனிப் பேரம் பேசுதலுக்கோ அன்றி விட்டுக்கொடுப்பிற்கோ எதுவுமே இல்லை. இவையாவும் கடந்த காலத்தில் போதியளவு மேற்கொள்ளப்பட்டு விட்டன. அத்தோடு இவற்றின் பலாபலனாகத் தமிழர் தரப்பு எதுவித நன்மையையும் பெற்றதாக இல்லை. மறுபுறமாக பலத்த ஏமாற்றங்களே எஞ்சியிருந்தன.

அத்தோடு தற்பொழுது முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான யோசனைகள் விடுதலைக்காக ஆயுதமேந்தி வெற்றிகரமாகப் போராடிய இயக்கம் ஒன்றினால் முன்வைக்கப்பட்ட அதேவேளை ஆயுதப்போராட்டத்திற்குப் பதிலாகச் சமாதான வழிமுறையில் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முன்மொழியப்பட்டுள்ள திட்டமாகும்.

அதுமட்டுமல்ல தமிழர் தரப்புக் குறிப்பாக விடுதலைப்புலிகள் இனப்பிரச்சினைத் தீர்விற்கான நகல்திட்டமொன்றை முன்வைக்க வேண்டும் என்ற கோரிக்கைகளின் அடிப்படையில் இவ் இ.த.அ. சபைக்கான நகல்திட்டம் முன்வைக்கப்பட்டதொன்றாகும். அத்தோடு இத்திட்டமானது விடுதலைப்புலிகள் எழுந்தமானமாக முன்வைத்த திட்டமும் அல்ல. அதாவது விடுதலைப்புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள நகல் திட்டமானது இன்று உலகின் முனைப்புப் பெற்றுள்ள இனப் பிரச்சினைகள் தொடர்பாக முன்வைக்கபட்டுள்ள தீர்வுத் திட்டங்களை ஆராய்ந்து, உலகில் பல நாடுகளிலும் பரந்து வாழும் தமிழ் சட்டத்தரப்பு வல்லுனர்களுடனும், சில சர்வதேச சட்ட வல்லுனர்களுடனும் பரிசீலனை செய்துமே முன் வைக்கப்பட்டதாகும். இதற்கு தமிழ் மக்களின்அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது.

இதுமட்டுமன்றி இந்நகல்திட்டம் புலிகளால் முன்வைக்கப்பட்ட போது சர்வதேச சமூகத்தினால் இத்திட்டம் வரவேற்கப்பட்டதோடு இத்திட்டத்தின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் எனவும் கூறப்பட்டது.

அவ்வேளையில் சிறிலங்கா அரசாங்கமோ இவ் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான நகல் திட்டத்தினை முழுமையாக ஏற்றுக்கொள்ளாது விட்டாலும் இதனடிப்படையில் பேசத்தயாரென அறிவித்தது. இதேசமயம் விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தையின் போது இந்நகல் திட்டத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்தத் தயாராகவே இருந்தனர்.

இத்தகையதொரு நிலையில் தற்பொழுது இடைக்கால நிர்வாகம் தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்கு புதிய திட்டம் யோசனைகள் என்பவற்றை முன்வைப்பதென்பதும், ஆரம்பிப்பதென்பதும் காலம் கடத்துவதற்கானதும், தமிழ் மக்களின் உரிமைகளை மறுப்பதற்குமானதொரு நடவடிக்கையே ஆகும். ஆனால் இவ்விடயத்தில் தமிழர் தரப்பில் இருந்து விட்டுக்கொடுப்பிற்கோ பேரம்பேசுதலுக்கோ இடமில்லை. இதனைச் சிங்கள ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதேவேளைசர்வதேச சமூகத்திற்கு தமிழ் மக்களின் நிலைப்பாடு குறித்து தெளிவுபடுத்தப்படுதல் வேண்டும். இன்று தமிழர் தரப்பிற்கு இப்பணி முதன்மையானதாகவுள்ளது.

-பிந்துனுவெவ படுகொலைக்கு எதிராக-

# ஆர்ப்பாட்டம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்டோர் விடுதலை

(கொழும்பு)

பண்டாரவளை பிந்துனுவெவ படுகொலைகளைக் கண்டித்து பொகவந்தலாவை நகரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்ததாகக் குற்றம் சாட்டி ஹற்றன் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கை, ஹற்றன் நீதிமன்ற நீதிபதி விஜயரட்ண நேற்று தள்ளுபடி செய்து குற்றம் சாட்டப்பட்டவர்களை வழக்கிலிருந்து விடுதலை செய்துள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கணபதி கனகராஜ், ஊடகவியலாளர் சிறீதரன், முன்னாள் அம்பகமுவ பிரதேச சபை உறுப்பினர்களான இரா.இரட்ணராஜா, அருளப்பன் ஆகியோர் உட்பட பன்னிரண்டு பேருக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கடந்த மூன்று வருடங்களாக நடைபெற்ற இந்த வழக்கில், சாட்சியங்கள் உரியமுறையில் நிரூபிக்கப்பட முடியாத காரணத்தினால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாக ஹற்றன் நீதிமன்ற நீதவான் தனது தீர்ப்பின் போது தெரிவித்துள்ளார்.

# கட்சி அமைப்பாளர்களின் பட்டியலின் அடிப்படையிலேயே வேலைவாய்ப்பு

சு. க. 53 ஆவது மாநாட்டில் மைத்திரிபால சிறிசேன

இனி வரும் காலங்களில் அரச துறைகளில் வேலைவாய்ப்புகட்சி அமைப்பாளர்களின் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுமென பொலநறுவையில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கட்சியின் 53 ஆவது வருட மாநாட்டில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது; பட்டியலில் பெயருள்ள அனைவருக்கும் வேலை வழங்கப்படுவது உறுதியென்றும் அதற்கு மேலும் அவகாசம் தேவை என்றும் கூறியதோடு அவசரப்பட்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பது பொருத்தமாகாது என்றும் தெரிவித்துள்ளார். இக் கூட்டத்தில் உரையாற்றிய மாகாண முதலமைச்சர் ஒருவர் தெரிவிக்கும் போது ஒருபுறம் விடுதலைப்புலிகள யுத்தத்துக்கு தயார்ப்படுத்தும் நிலையிலும் நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சி நிலை, எண்ணெய் விலை அதிகரிப்பினால் பொருட்களின் விலை அதிகரிப்பு என்பவற்றால் நாடு பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்திருப்பதாகக் கூறினார்.

தற்போது அரசாங்கத்துக்குள் பலவீனம் ஏற்பட்டுள்ளது. உண்மை எனினும் நாம் அரச உடைமைகளை தனியாருக்கு விற்கமாட்டோம் எனவும் மேலும்தெரிவித்துள்ளார்.

# இரண்டு இலட்சம் வேலைவாய்ப்புகளுடன் ஐ.தே.க. அடுத்த ஏப்ரலில் பதவியேற்கும்

-ஐ.தே.க. தேசிய அமைப்பாளர் எஸ்.பீ. திஸாநாயக்க

அடுத்த வருட ஏப்பரல் மாதமளவில் ஐ.தே.கட்சி ஆட்சியமைப்பது 2 இலட்சம் வேலை வாய்ப்புகளைக் கையில் வைத்துக் கொண்டே என, அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆகவே ஐ.தே.கட்சியிலிருந்து பிரிந்து சென்றுள்ளோர் மீண்டும் கட்சியில் ஒன்றிணைக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்குமாறும் ஐ.ம.சு. முன்னணிக்குள் இருப்போரை வெட்டுக்கொத்து மூலமாகவேனும் ஐ.தே.கட்சிக்குள் இணைக்க முயற்சி செய்யுமாறும் கட்சிசார்பில் கேட்டுக் கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 29ஆம் திகதி நடைபெற்ற கட்சிப்புனரமைப்புக் கூட்டத்தில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக் கூட்டத்துக்கு வருகை தந்திருந்த சிலர் கட்சித் தலைமைப் பதவியை மாற்றி திஸாநாயக்கவிடம் ஒப்படைத்தால் ஆயுள்பூராகவும் கட்சிக்காகப் பாடுபடுவதாகத் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலுககான பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பு எஸ்.பி. திஸாநாயக்கவிடம் வழங்கப்பட்டுள்ளமை இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் குழப்பநிலை ஏற்பட்டு நீதியும் ஒழுங்கும் சீர்குலைந்துள்ளது

ஐ.தே.க பிரதித் தலைவர் கருஜெயசூரிய

நாட்டில் குழப்ப நிலையேற்பட்டு, நீதியும் ஒழுக்கமும் சீர்குலைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனை வலியுறுத்தினார். கடந்த சில நாட்களில் நாட்டில் கொள்ளைகள் உட்பட வன்செயல்கள் பல இடம்பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர். அவற்றைத் தடுக்கப் பொலிசார் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பொலிஸ் ஆணைக்குழு மீது பலதரப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஆணைக்குழுவைக் காப்பாற்ற ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுக்கும் என்றும் குறிப்பிட்டார் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய பாராளுமன்ற உறுப்பினர் பந்துலகுணவர்தன, ஆடை ஏற்றுமதிக் கோட்டா முறை அடுத்த வருடமுடிவுக்கு வருவதால் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் வேலை வாய்ப்புக்கள் அற்றுப் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# போக்குவரத்துக்கு இடையூறான வாகனச்சாரதிகள் மீது நடவடிக்கை

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பகுதியில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளும் வாகனச் சாரதிகளுக் கெதிராக காவல்துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இரவு வேளைகளில் வாகனங்களின் மின் விளக்குகளை 'டிம்' போடாமல் செலுத்துதல், உரிய சமிக்ஞைகள் போடாது செலுத்துதல், மது போதையில் வாகனம் செலுத்துதல், மோட்டார் ஊர்திகளில் கலர்மின் குமிழ்கள் போடுதல், இரவில் மதுபோதையில் சந்திகளில் நிற்றல் போன்ற செயற்பாடுகளுக்கு எதிராக வட்டக்கச்சி காவல்பணிமனையினர் துரித நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றனர்.குற்றப்பண அறவீடு, தடுத்து வைத்தல் போன்ற நடவடிக்கைகள் காவல்துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.அத்துடன் இரவில் முற்றாக வெளிச்சமே இல்லாது வரும் வாகனங்கள் மீதும கடும்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (12)

-மொறட்டுவப்பகுதியில்-

# பொலிசார் பொதுமக்கள் மோதல் இரு பொலிசார் உட்பட 8பேர் காயம்

மொறட்டுவப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதல் ஒன்றில் 2 பொலிசாரும் பிரதேச வாசிகள் 6 பேரும் காயமடைந்தனர்

குற்றம் ஒன்று தொடர்பில் கைது செய்ப்பட்ட ஒருவர் தொடர்பிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது குறிப்பிட்ட குற்றம் செய்தவரைப் பொலிசார் கைது செய்தமையை ஆட்சேபித்த பிரதேசவாசிகள் பொலிசார் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் இதனையடுத்துப் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

# சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதே அரசின் முதல் வேலையாக இருக்கவேண்டும்

## ஐ.தே.க. பா.உ.ஜெயலத்ஜெயவர்த்தன

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதன்மைக் காரியமாக அமையவேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சி கூறியுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தனவே இவ்வாறு கூறியவராவார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்; நாட்டில் மீண்டும் யுத்தம் ஆரம்பிக்குமானால் வாழ்க்கைச் செலவு பன்மடங்கு அதிகரிக்குமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

எமது நாட்டில் பெரும்பாலானோர் சமாதானத்தையே எதிர்பார்க்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

## நோர்வே பயணம்

கண்காணிப்புக் குழுவின் தலைவர் டொன் புறாவ்ஹொவ்டே அவர்கள், வரும் வெள்ளி நோர்வே செல்லவுள்ளதாகத் தெரியவருகிறது.

நோர்வே வெளிவிவகார அமைச்சரையும் ஏனைய நோர்வே அனுசரணையாளர்களையும் சந்திக்கும் இவர், தற்போதைய கண்காணிப்பு நிலைப்பாடுகள், சமாதான முன்னெடுப்புக்கள், யுத்தநிறுத்த நிலைமைகள் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றியும் அவர்களுடன் ஆலோசிக்கவுள்ளார். கிழக்கில் இடம்பெற்று வரும் படுகொலைகள், அரச படையினருடன் இணைந்து இயங்கும் தமிழ்த்குழுக்களின் வன்முறைகளும் அதற்கு அரசு வழங்கும் ஆதரவும், யுத்தநிறுத்தத்தில் கையெழுத்திட்டுள்ள இரு பகுதியினரின் பல யுத்த மீறல்கள் போன்ற பல விடயங்களும் இச்சந்திப்பில் முன்நிலைப்படுத்தப்படவுள்ளதாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஒஸ்கார் சோனஸ் தெரிவித்தார்.

# கொழும்பில் முஸ்லிம் வியாபாரி இனந்தெரியாத குழுவினரால் கொலை

(கொழும்பு)

கொழும்பில் முஸ்லிம் வியாபாரி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார் புறக்கோட்டை பிரதான வீதியில் சென்ற ஞாயிறு இடம்பெற்ற இச்சம்பவத்தில் முஹமட் அக்ரம் (வயது-38)என்பரே கொல்லப்பட்டவராவார்.வீதி ஓரத்தில் நின்ற இவரை இனம் தெரியாத குழுவொன்று 9எம்.எம் பிஸ்ரலால் சுட்டுக்கொண்டதாகவும், சம்பவம் நடந்த இடத்தில் 36வெற்றுத் தோட்டாக்கள் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# பாதாள உலகக் குழுவைச்சேர்ந்த இருவர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

பாதாள உலகக்குழுவைச் சேர்ந்த இரண்டு முக்கிய நபர் சிறிலங்காவில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மோதர வத்தளை கடவத்த தொடலங்க கிராண்ட்பாஸ் ஆகிய பகுதிகளில் இடம் பெற்ற பல கொலைகள் மற்றும் ஒப்பந்தக் கொலைகளை புரிந்தமைக்காக பொலிசாரால் தேடப்பட்டுவந்த இருவரில்ஒருவர்பாணமயிலும் மற்றவர் புளூமென்டல்வீதியிலும் கைது செய்யப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தபட்ட இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக மோதர பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## புலிகள்...

வைத்திருந்து சுறுசுறுப்புடன் வேலை செய்து வந்த தமது சிரேஷ்ட உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டதைக் குறைகூறியுள்ளதுடன் இது சமாதான முயற்சியை பின் தள்ளியுள்ளது என்றும் கூறினார்.

அத்துடன், போர் நிறுத்த ஒப்பந்தத்தையும் சமாதான நடவடிக்கையையும் முடிவுக்குக் கொண்டு வரும் ஆயுதக் குழுக்களின் இது போன்ற கொலைகள் மற்றும் வன்முறைகளில் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஆக்கபூர்வமான தலையீடு ஏற்பட வேண்டும் எனவும் வேண்டிக் கொண்டார்.

தொடர்ந்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உதவியுடனும், ஆதரவுடனும் அடுத்த வாரமளவில் சிறிலங்கா இராணுவத்தினருடன் சந்திப்பு நடாத்துவதற்கு விடுதலைப்புலிகளின் மாவட்ட தலைவர்கள் உடன்பட்டனர்.

இத்தீர்மானத்தை வரவேற்ற கண்காணிப்புக் குழுத் தலைவர் இரு தரப்பினரும் தமக்கிடையேயான பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்ப பிரயத்தனம் செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

## சொந்த...

வரத்தை துண்டிக்கும் வகையிலான போராட்டங்களில் ஈடுபட தாம் தயாராகி வருவதாக அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே மகஜரைப்பெற்றுக் கொண்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பதிகாரி ஆர்.பி. றுவன்சந்திர சேகர குறிப்பாக உசன் பகுதியிலுள்ள வீடுகளைப் படையினரிடமிருந்து விடுவிப்பது தொடர்பாக யாழ். மாவட்ட படைகளின் புதிய கட்டளைத்தளபதி மேஜா ஜெனரல் சுனில் தென்னக் கோன் உடன் சந்திப்பிற்கான ஏற்பாடுகளைச்செய்து வழங்க உறுதியளித்துள்ளார்.அத்துடன் இவ்விடயம் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை பாதிக்கப்பட்டவர்கள் எடுக்க விரும்பின், இலவசச் சட்ட உதவியினை வழங்க தாம் தயாராக உள்ளதாகவும் உறுதியளித்துள்ளார். (27)

## மட்டக்களப்பில்...

கூறினோம். இதேவேளை எங்கள் போராளிகள் மீது இராணுவக் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் நடந்த இரண்டு சம்பவங்கள் பற்றி விரிவாக எடுத்துக்கூறினோம். இதன் போது எங்களுடைய மூன்று போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

முதலாவது சம்பவம் மட்டக்களப்பு நகரப்பகுதியில் நடந்தது. இதன்போது சேனாதி வீரச்சாவடைந்தார்.

மற்றையது வாகரைப் பிரதேசத்தில் மாங்கேணி இராணுவமுகாமிற்கு அண்மித்த பகுதியில் நடந்தது. இதில் பாவா, யோகா ஆகியோர் வீரச்சாவடைந்தனர். இவை இரண்டு சம்பவங்களும் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியிலேயே நடந்துள்ளது.

இது எங்களுடைய அரசியல் பணியில் ஈடுபடுகின்ற போராளிகளுக்கு ஓர் அச்சுறுத்தலாகவே இருக்கின்றது. இவை தொடர்பாக அவர்களுக்குத் தெளிவாக விளங்கப்படுத்தி உள்ளோம். என்றார்.

மட்டக்களப்பில் நடக்கின்ற வன்முறைச்சம்பவங்களுக்கு விடுதலைப்புலிகளும் பொறுப்பு எனக் கூறுகிறார்களே என கௌசல்யனிடம் கேட்டபோது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நாங்கள் மேற்கொள்ளும் அரசியல் வேலைகளுக்கு இராணுவமே முழுப்பொறுப்பையும், பாதுகாப்பையும் ஏற்க வேண்டும். ஆனால் அவர்கள் எம்மீது பிழையான குற்றச்சாட்டைக் கூறுகிறார்கள். இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடைபெறும் சம்பவங்களுக்கும் எங்களுக்கும் தொடர்பில்லை.

அப்படி நாங்கள் தவறுகள் செய்திருந்தால் அவற்றை உரிய ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டி இலங்கை அரசாங்கத்தின் சட்டதிட்டங்களுக்கு அமைய சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்பதனையும் நாங்கள் தெளிவாகச் சுட்டிக் காட்டி உள்ளோம்.

முன்பு மட்டக்களப்பு போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதியிடம் நாங்கள் கூறுகையில்

எங்களுடைய யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம், ஆயுதம் தாங்கிய ஏனைய குழுக்கள் அனைத்தையும் வடக்கு-கிழக்கிற்கு வெளியே கொண்டு செல்ல வேண்டும் என்பது உடன்படிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இந்த உடன்படிக்கை முடிவிற்கு அமைவாக இலங்கை அரசும் இலங்கை இராணுவமும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

அந்த உடன்படிக்கையை அவர்கள் நடைமுறைப்படுத்துவார்களேயானால் இவை போன்ற பிரச்சினைகள் எழாமல் எங்களுடைய அரசியல் பேச்சுவார்த்தை ஒரு நல்ல சூழ்நிலையைச் சென்றடைந்திருக்கும் என்பதனையும் அவர்களுக்கு முன்னரே கூறியிருந்தோம்.

அதேவேளை இந்தச் சம்பவங்கள் தொடர்பாக நாங்கள் மட்டக்களப்பு போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகளை அந்தந்த இடங்களுக்குள் கூட்டிச் சென்று அவற்றை எல்லாம் தெளிவாகக் கூறிஇருந்தோம். அப்போது அவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அவை நடந்துள்ளமை தவறு என்பதையும் தெளிவாக விளங்கி இருக்கின்றார்கள்

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் வேண்டுகோளுக்கிணங்க எதிர்வரும் வெள்ளிக்கிழமை மீண்டும் இராணுவத் தரப்பினரைச் சந்தித்து உரையாடவுள்ளோம்.

இதன் போது எங்களுடைய பாதுகாப்புத் தொடர்பாகவும் எங்களுடைய போக்குவரத்துத் தொடர்பாகவும் நாங்கள் கதைப்பதாக இருக்கின்றோம் என்றார்.

# கணவனின் கடி காயங்களுடன் பெண் மருத்துவமனையில் அனுமதி

கணவனின் அகோரக் கடி காயங்களுடன் இளம் பெண்ணொருவர் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அண்மையிலேயே திருமணம் செய்து கொண்டதாக தெரிவிக்கப்படும் யுவதி முகமெங்கும் கடிகாயங்களுடன் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாவற்குழிப் பகுதியைச் சேர்ந்த மேற்படி யுவதியின் கணவர் மனநிலை பாதிக்கப்பட்ட ஒருவர் என திருமணத்தின் பின்னர் கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (27)

# கிளி. அம்பியூலன்ஸ்சுடன் முச்சக்கரவண்டி மோதியது

(அலுவலக செய்தியாளர்)

முச்சக்கர வண்டி ஒன்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை அம்பியூலன்ஸ்சுடன் மோதியதில் அம்பியூலன்ஸ் சிறிய சேதங்களுக்கு இலக்காகியுள்ளது.

இச்சம்பவமானது நேற்றுமாலை 6.30மணியளவில் கிளிநொச்சி இரணைமடுச்சந்தியில் இடம்பெற்றுள்ளது.

முறிகண்டியிலிருந்து கிளிநொச்சி நோக்கி பழுது பட்டநிலையில் இருந்த முச்சக்கர வண்டியை இன்னொரு முச்சக்கர வண்டி கட்டிஇழுத்து வந்தது. இச்சம்பவம் இடம்பெற்றஇடத்தில் கட்டி இழுத்து வந்த முச்சக்கரவண்டி, உந்துருளி ஒன்றுடன் ஒன்றுமோதி அதே வேகத்தில் எதிரே வந்த அம்பியூலன்ஸ்மீது மோதியது. இச்சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலதிக விசாரணைகளினை தமிழீழ காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (சோ,கு)

# கனகராயன் குளம் ம.வி புதிய கட்டடம் திறப்பு

இராணுவ நடவடிக்கையின் போது சேதமான வவுனியா கனகராயன் குளம் மகாவித்தியாலயம் நிகொட் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டுப் பாட சாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது மூன்று மாடிக் கட்டடமாக கட்டப்பட்டுள்ள இந்தப் பாடசாலை கட்டடத்தினை இன்று வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் திறந்து வைக்கவுள்ளார். அத்துடன் வவுனியா வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் தண்டாயுதபாணி மற்றும் நிகொட் திட்ட அதி காரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர் இந்த மூன்று மாடிக்கட்டடமானது 65 இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (21)

# ஐ.தே.க.பா.உ மிலிந்தமொறகொட இன்று இந்தியாவுக்குப் பயணம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொரகொட இன்று இந்தியா செல்லவுள்ளார்

எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய இந்த விஜயம் இடம்பெறுகிறது.

நாட்டின் சமாதானம் மற்றும் பொருளாதாரம் சம்பந்தமாக இந்த விஜயத்தின் போது மிலிந்த மொரகொட இந்திய பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்ட ஏனைய தலைவர்களுடன் கலந்துரையாடவுள்ளார் அண்மையில் மிலிந்த மொரகொட நோர்வேக்கு சென்று முக்கிய பேச்சுவார்த்தையில் ஈடுபட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதேவேளை எதிர்கட்சி தலைவர் ரணில் விக்கிரம சிங்கவும் விரைவில் இந்தியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார். (32)

# 14 வருடங்களின் பின்னர் நஷ்டஈடு கிடைத்தது

1990 ஆம் ஆண்டில் இடம்பெற்ற குவைத் யுத்தத்தின் போது தொழில் வாய்ப்பை இழந்த யாழ்ப்பாணத்து இளைஞன் ஒருவருக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டினால் 3 இலட்சத்து 85 ஆயிரம் ரூபா நஷ்ட ஈடு கிட்டியுள்ளது.

கொக்குவில் பகுதியைச் சேர்ந்த பாலசிங்கம் அருள்தாஸ் எனும் இளைஞருக்கே குவைத் அரசு 14 வருட இடைவெளியின் பின்னர் இந்நஷ்ட ஈட்டினை வழங்கியுள்ளது.

நஷ்ட ஈட்டுக்கொடுப்பனவு தொடர்பாக குவைத் அரசினால் வழங்கப்பட்ட பட்டியலில் இவரது பெயர் இடம் பெற்றிருக்காமையினை அடுத்து இது தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்திற்கு புகார் செய்திருந்தார்.

இது தொடர்பாக ஆணைக்குழு மேற்கண்ட நடவடிக்கைகளையடுத்தே இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. (27)

## மீனவர்...

(28 வயது) எனும் குடும்பஸ்தர் காலில் காயமடைந்திருந்ததாகக் கூறப்படுகின்றது. அத்துடன் துப்பாக்கிச் சூட்டில் மீன்பிடி இழுவைப் படகின் வெளியிணைப்பு இயந்திரத்தின் எரிபொருள் களஞ்சியம் தீப்பற்றிக் கொண்டதால் படகும் தீப்பற்றி எரிந்துள்ளது.

இதனிடையே எரிந்த நிலையில் சக மீனவர்களால் கட்டியிழுத்து வரப்பட்ட இப்படகு குருநகர்க் கரையில் நிறுத்தப்பட்டிருந்தது.

இதேவேளை நேற்று முன் தினம் இரவு நூற்றுக்கணக்கான குருநகர்ப் பகுதி மக்கள் திரண்டு சென்று இவ் அசம்பாவிதம் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றைச் செய்திருந்ததாக ஆணைக்குழு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 01ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.